




ஓலை 107| ஓசை 230| பிப்ரவரி 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

## பொருள்

பிறரால் தனக்குச் செய்யப்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வது, துன்பம் செய்தவர்க்கும் துன்பம் செய்யாதிருப்பது என்னும் இவ்வளவுதான், தவம் என்பதன் இலக்கணம்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி!

பாவகை : வெளி மண்டிலம்

திரிந்தும் அலைந்தும் தேனீச் சேர்த்த-தேன்பொருளாய்;
திரிந்தும் அலைந்தும் திகைக்கும் மாந்தர் தேன்பொருளாய்;
சரியாய்த் தேனடைத் தள்ளியே திருடுவர்-தேன்பொருளாய்;
விரிந்த கல்வியே மெய்ப்பொருள் களவாகா-தேன்பொருளாய்!




பட்டுப் புழுவும் பட்டுநூல் ஈயும் உயர்பொருளே;
எட்டு திசையிலும் ஈடிலாக் கல்வியும்- உயர்பொருளே;
கட்டுக் கட்டாய்ச் செல்வமாய்க் களவாகா உயர்பொருளே;
முட்டி முனக வைக்காக் கல்விதான் உயர்பொருளே!

சேர்த்த கைப்பொருள் செலவழியும்; கல்வி- அழியாதே;
பார்த்துப் பார்த்துப் பதுக்கிடாக் கல்வி அழியாதே;
ஊர்ந்து போகா மெய்ப்பொருள் கல்வி- அழியாதே:
ஓர்ந்து கல்வியை உவந்தே ஏற்போம்- அழியாதே!

கொடுக்கக் கொடுக்கக் கூடும் பொருளே- கல்வியாகும்;
எடுக்க எடுக்க ஏற்றம் பெறுவது- கல்வியாகும்;
உடுத்திக் கிழிக்கும் உடையு மிதுவல்ல- கல்வியாகும்;
தடுத்த போதும் தடையிலா தோடும்- கல்வியாகும்!




காலந் தோறும் கடுமையா யுழைத்த கைப்பொருளாய்;
ஞாலந் தன்னில் நாளு முயர்த்தும் கைப்பொருளாய்;
ஆல மரமாய் அசையா நெஞ்சக் கைப்பொருளாய்;
கால மெல்லாம் கல்வி யுதவும் கைப்பொருளாய்!

இழந்த செல்வம் எலாம்சேரா தென்பர்- ஒருசாரார்;
இழந்த வாக்கு யெலாம்சேரா தென்பார் - ஒருசாரார்;
இழந்த மானம் எலாம்சேரா தென்பார் - ஒருசாரார்;
இழக்க லாகா யெலாம்கல்வி யென்பார்- ஒருசாரார்!

**இலக்கணக் குறிப்பு:**

மண்டிலப் பாக்களில் வெளிமண்டிலமும் ஒரு வகையாகும். இப்பா வகையை இக்காலத்தில் எவரும் எழுதாததால் தமிழுலகிற்கு இப்படி ஒரு பா வகை இருப்பதை உணர்த்தவே இப்பாடல். இதில் நான்கடிப் பாட்டில் நான்கடியும் ஓரெதுகை பெற்று வரும். அடி தோறும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். ஒவ்வொரு அடியின் ஈற்றுச் சீர் ஒரே சொல் தனிச்சீராக எல்லா அடிகளிலும் வருவதே வெளிமண்டிலமாகும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# பூக்களைப் போற்றி

**1.குறள் வெண்பா.**

மலரும் மலர்கள் மணமும் மருந்தே
அலங்கல் கழுத்திற் கணி.

**2.இன்னிசை வெண்பா.**

காவில் மலருமே
கண்ணைக் கவருமே

தாவிடும் வண்டினம்
தன்னை மறக்குமே.

வாவியுள் தாமரை
வஞ்சியை ஈர்த்திடும்

காவியம் பாடுமே காண்.

**3. நேரிசை வெண்பா.**

வகையாய் மலர்கள் வனத்தில் மலரும்.
தகைவாய் மகளிர் தலையில்-நகைக்கும்
மணத்தைப் பரப்பி மனதில் அமைதி
கணத்தில் நிறுத்துமே காண்.

•

**4.சிந்தியல் வெண்பா.**

வண்ணமாய்ப் பூத்தே வனப்பாய்த் திகழுமே
எண்ணிலாப் பூக்கள் எழிலாய் அசையவே
பண்ணிசை பாடுமே புள்.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# கண்டெடுங்கள்

தொலைந்தது குறித்து
காவல் நிலையத்தில்
புகார் கொடுத்தாயிற்று.

புகைப்படம்
தொலைந்த இடம்
அப்போது அணிந்திருந்த ஆடை
அங்க அடையாளங்கள்

நிறம்
உயரம்
கொண்டு சேர்க்க வேண்டிய
இடம்
தகவல் தர வேண்டிய
தொலைப்பேசி எண்கள்

வருந்தும் உள்ளங்கள்
சன்மானத் தொகையென
அனைத்தும் அறிவித்தாயிற்று
விரைவில்
கண்டெடுங்கள் என்னை.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# முதல் சந்திப்பு

நேற்றைய நிலாநாளில்
முதல் சந்திப்பு.
தடுமாறச் செய்த
அன்பின் பெட்டகமாய்.
விழுந்த இதயத்தை
விண்ணில் தேடுகிறேன்.

மாயமாய் கண்சிமிட்டி
வசியம் செய்தாளோ?
விழியில் விழ
வைத்தவள் யாரோ?
மூன்று குணம்
கொண்ட களஞ்சியமோ?

உள்ளுக்குள் புரியாமல்
உறவாடுகிறேன் நெஞ்சுக்குள்ளேயே.
தேவதைகளின் தொகுப்பில்
தேவாயினியாய் காட்சி தந்தவளோ.
வந்த நிலவும் வழிவிட்டு நிற்க.

உறவாடவே கண்களில்
செய்திச் சொல்ல.
புன்னகையும் பொன்னகையும்
சுமந்த நகையாளின்.
இதழ்கடையில்
துடிக்கும் சொற்களுக்காக
காத்திருக்கிறேன்.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# சீவக சிந்தாமணி (பன்னிரெண்டு)

3. காந்தருவதத்தையார் இலம்பகம்.
மந்திரம் தந்திரம் தெரிந்தவன் தரன்
முந்திச் செல்லும் கலங்களைக் கண்டான்
அந்தக் கலங்கள் சீதத்தன் சொந்தம்
எந்த இடையூறும் இன்றி பயணித்தன

மாய தோற்றத்தை உண்டு பண்ணினான்
பாய்மரங்கள் புயல் காற்றில் முறிந்தன
ஆய்ந்து யோசிக்கும்முன் எல்லாம் முடிந்தன
காய்ந்த சருகாக மிதந்தன கப்பல்கள்

பக்க பலமான பணிமக்களும் மூழ்கினர்
வக்கிரனால் சீதத்தன் மீண்டும் பராரி,
அக்கிரமமாக எல்லாவற்றையும் இழந்தான்
சிக்கிக் கொண்டான் மீளாத துயரத்தில்

வழிப்போக்கன் தரன் சீதத்தனை சந்தித்தான்
கிழிந்த நாராகக் நொந்துக் கிடந்தான்
சீதத்தன் நடந்ததைக் கொடுமையைக் கூறினான்
விழிகளில் கண்ணீர் '' எப்படி இனிவாழ்வது?''

நண்பா கவலைகள் என்னிடம் விட்டுவிடு
இன்பமாக வாழ்க நான் இருக்கிறேன்
என்னுள் மந்திர சக்தி உண்டு
உன் இழப்புக்கள் எல்லாம் கிடைக்கும்

''இதோ பார் மரக்கலம் மழுமையாக
அதோ பணிமக்கள் உயிருடன் வருகிறார்கள்
ஏதோ கெட்ட கனவாக நினைத்துக்கொள்.''
"சகோதரனாக செய்த உதவிக்கு நன்றி"



"இழந்தது எல்லாம் மீட்டுக் கொடுத்தாய்
பழகிய தோழனாக உயிர் கொடுத்தாய்
விழைகிறேன் நான் என்ன நன்றிக்கடன்
அழைத்துச்செல் பின்னால் வருகிறேன்"

சீதத்தனை ஆட்டின்மேல் ஏற்றினான்
ஆதவனை வணங்கி வான்வழி பறந்தான்
பேதமற்ற கலுழவேகன் அரண்மனை சேர்ந்தான்
வேதங்கள் ஓத சீதத்தனை அன்புடன் வரவேற்றான்.

மகள் காந்தருவதத்தை பற்றிக் கூறினான்
"அவள் எதிர்காலமே உங்கள் கையில்
அவளை இராசமாபுரம் அழைத்துச் செல்"
அவளை வீணாபதியுடன ஒப்படைத்தான்
(வீணாபதி : தோழி)

"இவள் இன்றுமுதல் உன் மகள்
இவள் யாழ் இசையில் வல்லவள்
இவளை யாழ் போரில் வெல்பவனே
இவளுக்கு உற்ற துணைவன் ஆவான்"

தொடரும்...

கவிஞர் ந. திருக்கோழு

# பெண்வழிச் சேறல்

## அதிகாரம் : 91



பெண்வழிச் சேறல்

மனையாள் விருப்பின்படி
மயங்குவார் பயனடையார்.
தன்கடமை யாற்றுவோர்க்கு
வேண்டாநிலையு மஃதேயாம்.

கடமையாற்றலை தவிர்த்து
மனையாளின் பெண்மைவிரும்பும்.
பேதையினாக்கம் ஆண்பாலர்
அனைவரையும் நாணச்செய்யும்.

மனைக்குத் தாழ்ந்தடங்கும்
இழித்தன்மை யொருவனுக்கு.
நல்லோரிடை பழகுகையில்
நாணத்தையே நல்கும்.

மனைக்கஞ்சும் மறுமைப்பயன்
இல்லானின் செயலாண்மை.
நலனிருந்தும் நல்லோரால்
மதிக்கப் பெறாததாம்.

மனைக்கஞ்சி அடங்கிவாழ்வோன்
தன்வினைப் பொருளாயினும்.
நன்மைக்காய் நல்லோர்க்கீயாது
தனிலஞ்சி அமைந்திருப்பான்.

மனையாளின் மூங்கிலொத்த
புயத்திற்கஞ்சுவோர் வீரங்கொண்ட.
அமரராய் வாழ்ந்திடினும்
பெருமையிலாதாரே யாவார்.

நாணமற்று மனையாளேவலுக்கு
ஒழுகுவோரின் ஆண்மையிலும்.
நாணத்தை இயல்பாயுடைய
பெண்மையே பெருமையுடையதாம்.

மனைக்கஞ்சி அடங்குவோர்
நண்பர்குறை தீர்க்கலாகார்.
மறுமைக்குதவும் அறத்தையும்
அவர் செய்யலாகாராம்.

அறம்புரிதலும் பொருளீட்டலுமான
பிறகடமைக ளெல்லாம்.
மனையாளின் ஏவல்படி
நடப்போரிடத்து இலயாம்.

எண்ணவல்ல நெஞ்சமும்
செல்வமுமுடைய வேந்தர்க்கு.
மனைக்கஞ்சும் அறியாமை
ஒருக்காலத்தும் இலயாம்!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# புலம்பல்

அன்பில்லை
பண்பில்லை

அறமில்லை
அமைதியில்லை

நீதி இல்லை
நேர்மை இல்லை

சத்தியமில்லை
சாந்தி இல்லை

சீலம் இல்லை
சிந்தனை இல்லை


தானமில்லை
ஞானமில்லை

இனிமை இல்லை
எதுவுமே இல்லை

உலகம் தொல்லை
உத்தரவாதம் இல்லை

போதிக்க வந்த புத்தன்
புலம்பிக் கொண்டே

கண்கள் மூடி
கல்லாய் சமைந்தான்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# வாழிய தமிழ்

வாழிய தமிழ் வாழிய தமிழ்!
தென்குமரியில் தோன்றியவளே!
தென்னவர் மன்றத்தை ஆள்பவளே!
திசையேங்கும் ஒலிக்கும் இசையே!

அறவோர் புகழ் காத்திடும் தமிழே!
அல்லல் நீக்கும் அருந்த மிழே!
மள்ளர் மானம் காக்கும் தமிழணங்கே!
மாற்றார் செருக்கு அறுக்கும் சங்கே!

கொற்றவன் கோல் உயர்த்தும் தமிழே!
குடிகள் இடுக்கண் நீக்கிடும் அமுதே!
பாவலர் வறுமை தீர்க்கும் தமிழே!
பகை வெல்லும் பழந்த மிழே !

தென்னவர் செப்பும் செம்மொழியே
தெள்ளியர் உம்மை சீராட்டி
பண் நூறாயிரம் படைத்தாரே!
பெருங்காப்பியச் செய்யுளே!

ஆதன் தீட்டிய எழுத்தோவியமே!
ஆய்மகள் தந்த கலிவெண்பாவே!
கீரன் ஆற்றுப்படை பனுவலே!
அறம் வளர்க்கும் அருந்தமிழே!

தீயோர் செருக்கு அறுக்கும் வாளே!
என்றும் ஏற்றம் தரும் தமிழொளியே!
வாழிய தமிழ் வாழிய தமிழ்!




கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

முதுமையின் பெருமையையும்
இவர்களின் அருமையையும் உணரத்தொடங்கினேன்
காதலின் இனிமையை.



கவிஞர் ம. ஹரிஷ், பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்

# அமைதி

அன்பின் பிறப்பிடம்
அமைதியின் இருப்பிடம்
கருணையோடு வாழ்ந்திட்டால்
அகிலமும் நமதாகிடுமே

பாசத்தை பகிர்ந்து
நேசத்தை வளர்ப்போம்
கடுஞ்சொல்லின்றி கனிவாய்
பேசிடுவோம் எந்நாளுமே

அமைதியான மனதில்
ஆனந்தம் உண்டாகிடுமே
வஞ்சம் மறைந்திட
நெஞ்சமும் நெகிழ்ந்திடும்

அமைதி கொண்டால்
மதிப்பும் மரியாதையும் கிட்டிடுமே
புன்னகையால் அன்பைத்
தந்து ஆதரிப்போம்

சினத்தை மறந்திட்டால்
சிறப்பாய் வாழலாமே
உண்மையாய் நடந்திட்டால்
திக்கெட்டும் வாழ்த்தும்

தவறான வார்த்தைதனை
ஒருபோதும் பேசிடாதே
தன்னிலை மறந்து
உன்னிலை இழக்காதே

பிறருக்கு துன்பம்
தந்து மகிழ்ந்திடாதே
அமைதியே வாழ்வின்
வசந்தம் என்றுணர்ந்திடு

ஆர்ப்பாட்டம் அழிவுக்கு
பாதை வகுக்கும்
நலமாய் இருந்திட
நன்மைதனை செய்திடு

இதயத்தில் இனிமை
கொண்டு வாழ்ந்திடு
ஈகை புரிந்து
எண்ணமதில் சிறந்திடுவோம்

அமைதியையே பழகிய
ஓசையாய் மாற்றிடு

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# மாற்றங்கள்



மாற்றங்கள் என்றும்
வாழ்வுக்கு அழகு
தடுமாறும் நாட்களில்
மனதிற்கு விருந்து

உருமாறும் மனிதர்களுக்குள்
உவகைகள் ஊறும்
உலகறியா இன்பங்களுள்
இதுவும் ஒன்று

நேற்றைய தவறுகளை
விசாரிக்கவோர் அவகாசம்
இன்றைய நாளைத்
திட்டமிட வழிகோலும்

சிந்தனை மாற்றத்திற்கு
சிறப்பான தீர்வு
சீரிய ஒழுங்கில்
நேரான பார்வை

வலியுள்ள வாழ்வில்
புதுவாழ்வு பூக்கும்
நிறைவுள்ள உள்ளத்தை
நீண்டநாள் பாதுகாக்கும்

தொடரும் சுமைகளுக்கு
சுகமான தலையணை
நீடித்த விழிப்புக்கு
தூளியில் துயிலாகும்

வெறுப்புகள் களைந்திட
சூழ்நிலைக் களமாகும்
உறவுகள் பெருகிட
புதியதோர் தேசமாகும்

மாற்றங்கள் சுயத்தை
அளவிட வைக்கும்
விமர்சனங்களை மீள்பரிசோதனை
கொண்டு பட்டைத்தீட்டும்

மாற்றங்கள் நேசமுள்ள
சுவாசமாக மாறினால்
தேசத்தை வென்றிட
இலகுவழி கூறும்

உள்ளம் உடன்படும்
உணர்வுகள் வலிமையானவை
பிறர் தலையீடு
என்றும் உறுதியற்றவை

கவிஞர் சேஹூ மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹால்மில்லாவ

# சதுரங்கக் கட்டம்

கருப்பும் வெளுப்பும்
கலந்தது தான் வாழ்க்கை!
மனம் போன போக்கில் வாழாமல்
நியதிக்குள் கட்டுப்பட்டு
வாழ வேண்டும் என்ற தத்துவம்
கட்டத்துக்குள் இருக்குது!
ராஜாவை குறிவைத்து
முன்னே வரும் சிப்பாய்கள்
நேரே வரும் யானை
குதித்து வரும் குதிரை
இடம் விட்டு இடம் மாறினாலும்
ராஜாவுக்கு ஆபத்து!
ராஜாவைக் காப்பாற்ற வரும் ராணி!
ராணி அவள் சாய்ந்து விட்டால்
ராஜாவின் ஆட்டம் முடிந்து விடும்!
தலைமை தாங்கும் பண்பு கொண்ட
பெண்ணொருத்தி இல்லையெனில்
ஆண் மகனுக்கு வாழ்வு இல்லை!
மதி கொண்டு காய் நகர்த்த
வெட்டுப்படாமல் தப்பிக்கலாம்!
விதி ஆடும் ஆட்டத்தை
வென்றிடலாம்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# இன்றைய தேவை அறிவியல் பார்வை

நவீன உலகத்தின் காதலன்
அளவிடமுடியாத வானும்
அறிவியலில் அடக்கம்.
எண்ணமுடியாத விண்மீனுக்கும்
கதை சொல்லும் இந்த விஞ்ஞானம்.
திரவியங்களின் அரசி
வேதியியல்.
புல்லுக்கும் புனைப்பெயர்
உண்டு தாவரவியல்.
இரு உயிர் இணைத்து
ஓர் உயிர் ஆன அதிசயமும்.
மனித உடலுக்கு மொழி பேசுவதும்
உயிரியல்.
இயந்திரங்களின் அகராதி
இயற்பியல்.
காற்றுக்கு வேலியில்லை
அதை கட்டுப்படுத்தும்
மந்திரமும் இதுவே.
இரு முகத்தின் கல்வனோ இவன்?
வியக்கவும் செய்வான்!
ஆட்சியும் செய்வான்!
காலத்தின் கல்வன்,
கண்ணிமைக்கும் நொடியில்
கடிகாரமும் இவன் மடி சாயுமே!
கற்காலம் முதல்
கலிகாலம் வரை
அறிவியல் வளர்ச்சி கண்ட உலகில்
ஆரோக்கியத்தில் வீழ்கிறதே!
ஆராய்ச்சிகள் பல இருந்தும்
புது நோய்கள் வர காரணம் என்ன?
தெளிவான சிந்தனைக்கும்,
அறிவியலின் ஆழத்திற்க்கும்
அகிலத்தில் இடமுண்டு!



கவிஞர் சி. காமேஸ்வரி, வீரப்பன் சத்திரம்

# வாழ்க்கைச்சடங்கு

இறுதிச்சடங்கு போல
இரை தேடும்
வாழ்க்கைச்சடங்கு முடித்து
பிணமாகி
பிறப்பை வீணாக்கி
தீர்க்கும் முன்புவரை
நெஞ்சம் நிமிர்த்தி
பெருமிதப்படுகிறது
குரங்கு மனசு



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# பொம்மையின் அழுகை

நீ கையில் எடுத்து கொஞ்சும்
உயிரற்ற அழகு பொம்மையும் அழுது புலம்புகிறது
உயிருள்ள அழகு பொம்மையான
உன்னை கொஞ்ச முடியவில்லையே என்று



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# சாய்ந்த தராசு

பிழை எய்தி பிழைக்கும் மனிதயினம்
காலமதை சாதகமாய் திருப்பும் சுயநலம்
வாய்மைக்கூட வழி தவறி திணற
சத்தியமே நித்திரையில் அந்தி சாய

சீரான பொழுது சீர் கெட்டு பாய்ந்திட
நேரான உலகம் மாறாக மடிந்திட
கர்வம் கொண்டு சர்வம் உறைந்திட
பொறாமை படர்ந்து பகைமை ஓங்கிட

அன்றாடம் அதமன் ஆக்கம் புரிய
திண்டாடி பிழைக்கும் ஆண்டி மானுயர்
வஞ்சகம் வார்த்து கேதம் தவழ
கபடம் சூடிய இந்த நாட்களும் இருளில்

சூழ்ச்சி அணிந்து வாழும் துட்டர்
வீழ்ச்சி அடைந்து துவளும் கேளர்
சூது தீட்டி மறைக்கும் அறம்
அநீதியில் மிதக்கும் மாண்பு நியதி

அகந்தை சூழ்ந்து அகம் புரள
விவாதங்கள் விரைந்து நியாயம் அகல
வேடம் போட்டு வெம்மை மிளிர
கலியுக காலமிதில் வன்மம் உயர

முரண்பாடு ஓங்கி சட்டம் சதியிலே
பண்பாடு பிதுங்கி பாரதம் விதியிலே
சுயநல புவியிலே படைத்த கடவுளும் குழம்பிட,
நூதன நவீன உலகில் "சாய்ந்த திராசு"



கவிஞர் ஹரிஉமா, நாகப்பட்டினம்

# மண்ணைக் காத்த மாமனிதர்கள்

மண்ணையும் பொன்னாக காத்தவர்கள் இவர்கள்
குருதி சிந்தி நமக்காக பாடுபட்டவர்கள்
அல்லும் பகலும் ஓயாமல் உழைத்தவர்கள்
வீரம் காத்த தலைவர்கள் எத்தனை எத்தனை
புண்ணிய பூமியில் போற்றப்பட வேண்டியவர்கள்
மனதில் என்றுமே அழியாத பொக்கிஷங்கள்
இளைய தலைமுறைக்குச் சொல்லிக் கொடுங்கள்
நாட்டிற்காக இன்னுயிர் நீத்த தியாகிகள்
வாழ்க்கைப் பாடத்தை படிக்கச் சொல்லுங்கள்
எண்ணிலடங்கா தலைவர்கள் பெயர் தெரியாது
அவர்களும் நமக்காக பாடுபட்டவர்கள் அவர்களையும்
இந்நேரத்தில் நினைவுக் கூற வேண்டும்
காந்தி பெரியார் திருப்பூர் குமரன்
வங்கம் கண்டெடுத்த சிங்கம் நேதாஜி
சிவகங்கை மீட்ட வேலு நாச்சியார்
செக்கிழுத்த செம்மல் வ உ சி இவருக்கு
இழைத்த கொடுமைகளை சொல்லவும் வேண்டுமா
அஞ்சாத சிங்கங்கள் இவர்களது நீண்ட
பயணம் நம்மை எல்லாம் சுதந்திரமாக
வாழ வைத்தது வருடம் தோறும்
போற்றுவோம் மண்ணைக் காத்த மானுடர்களை



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# நீங்கா நினைவுகள்

முதல் பாடசாலை
முதல் தலைமை ஆசிரியர்
முதல் வகுப்பாசிரியர்
முதல் தோழி
முதல் பாடம்
முதல் முழு மதிப்பெண்
முதல் கையெழுத்து
முதல் தாவணிப்பருவம்
முதல் வெற்றி
முதல் முத்தம்
முதல் பிரசவம்
முதன்முதலாக "அம்மா" என்று கேட்டதருணம்
முதல் வழிபாட்டுக்கான பயணங்கள்
முதன்முதலாக வாழ்ந்தோரின்
வரலாறுகளை அறியச்சென்ற பயணங்கள்
முதல் என்ற ஒன்றே
வாழ்வின் நீங்கா நினைவுகள்!



கவிஞர் பானு அப்துல்லா

# நிழலின் சாயல்

ஆழ்ந்து சிந்தித்த அயர்வில்
கனவுக்குள் மூழ்கிய எண்ணங்கள்

இவள் சாயலில்
உடலின் அசைவற்ற இமைச்சரிவில்
நிறுத்தி வைத்தது சில நிமிடங்கள்

உடலே மனமா
மனமே எண்ணங்களா
எண்ணத்தில் இவள் நிழலா
நிழலே இவள் சாயலா

அசைவற்றுப் போயின் இவள் யார்?
தூரத்து குருவிச் சத்தம்
இமைச்சரிவை சற்று உருளச் செய்தது!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# வாடிவாசல்

ஆரவாரம் அது விண்ணை பிளக்க
புழுதிக்காடாய் செம்மண் காற்றில் கலக்க
மார்தட்டி மீசைமுறுக்கிக் கொள்ளும் வீரமும்
கூர்தீட்டிய கொம்புடன் தீட்சண்ய விழிகளும்
நான்கு கால் பாய்ச்சலில் காளைகளும்
இரண்டு கால் பாய்ச்சலில் காளையரும்
எதிரெதிரே முகம் பார்க்கும் வீரவாசல்
வரலாறாய் வாசம் வீசும் வாடிவாசல்



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# காதல் வந்தால்

காதல் வந்தால்
நெஞ்சில் ஏக்கம் பிறக்கும்.
கண்கள் தூக்கம் மறக்கும்.
உள்ளம் தினம் உருகும்
உயிர் தீயில் கருகும்.

காதல் வந்தால்
இதயம் அடிக்கடி
இடம் மாறும்.
எண்ணங்கள்
நிலை குலைந்து
தடம் மாறும்.
விழிகள் தூக்கம் துறந்து
கனவுக்கு தந்தியடிக்கும்.

பனிப்பெய்தால் வருகின்ற
கூதல் போல எல்லோர்க்கும்
பதின்மப் பருவத்தில்
தவறாமல் வருகின்றதே
பலாய்ப் போன இந்தக் காதல்.



கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த கிலேவெல மாத்தளை

# நம்மிடம்தான்

நாம் நட்பாக நினைத்தவர்களும்
நாம் உறவாக நினைத்தவர்களும்
நம்மை விட்டு
சற்று விலகி இருக்கின்றார்கள்
என்றால்?
நம்மிடம்தான் ஏதோ பிரச்சினை உள்ளது
என்று அர்த்தம்.



கவிஞர் யோகலிங்கம் தமிழ்மாறன், இலங்கை

# இதயம் கவர்ந்த ஆசான்

செந்தமிழ்ச்செல்வி
கவி பாடினி
தோழமை உள்ள உறவே
உறவுக்கு என்றால் சிறப்பு
ஆறுதலுக்கு தந்தையவள்

அரவணைத்து புத்திமதி
கூறுவதில் அன்னையவள்
அன்பான ஆசான்

என்றுமே பெற்றோருக்கு பக்கபலமானவர்
பெற்றோரின் மனதை வென்றவர்

இதயத்தில் நீங்கா இடம் பிடித்தவர்
மாணவர்களுக்கு
பின்னூட்டமான ஆசான்

மின்னிடும் பூச்சிகளை மின்னும்
தாரகை ஆக்கியவர்
செய்யும் தொழிலை நேசித்து பணி புரிபவர்

என் ஆசானே! ஆசிரியர் பணி அறப்பணி
அறிவூட்டும் பணி என்று
மாணாக்கரை முயற்சியின் பக்கம் அழைத்தவர்.

எனக்கு பிடித்த அன்பான உறவு
அன்பால் அனைவரையும் கவர்ந்த உறவு

உம்மை வர்ணிக்க வார்த்தை இல்லையே
என்னை கவர்ந்த ஆசானே
என் இதயத்தில் இடம் பிடித்தாயே.



கவிஞர் முர்ஷிதா பேகம், இலங்கை

# தனிமை பழகு

தனிமை பழகு
உணர்வுக்கு உயிரூட்டு
காற்றும் காதோடு பேசும்
பறவையின் பாஷை புரியும்
மனதின் மர்மங்களுக்கு
விடைகள் விளங்கும்
இலையின் அசைவுக்கும்
இதயம் கவிபடைக்கும்
நிலவு மகளின் குளிரொளியும்
ஆடை அணிவிக்கும்
வண்ணமிகு வாசமலர்களும்
நேசம் பேசும்
மேகக்கூட்டம் தழுவிடும்
மலைகளும் பன்னீர்
தூவி பாராட்டும்
கடலலையாய்,ஆர்ப்பரிக்கும்
அருவியாய் இயற்கை அன்னையின்
இதயத்துடிப்பு
இனி உன் இதயம் தீண்டும்
இனியவளே!



கவிஞர் பா. அருள்ஜெயந்தி, சிதம்பரம்

# அப்பா

அனைவருக்கும் (நமக்கு) உயிர் அளித்த உத்தமரே
அனைத்து ஆதங்கத்தை அடக்கி ஆள்பவரே
அன்பையுமே அளவாக பயன்படுத்தும் அன்பாளறே
அனுதினமும் குடும்பத்திற்காக உழைப்பவரே
அவர் அன்னை-பிதாவை அரவணைத்தே - என்
அன்னையையும் அரவணைப்பவரே

ஆசை ஆட்டம் கண்டது அவருக்கு
இனிய இல்லத்திற்க்கு ஈடுயிணையேது இவருக்கு
ஆணவம் ஆதிக்கமற்றது அவருக்கு
இல்ல இன்பத்திற்கு ஈடுயிணையேது இவருக்கு
ஆறுதலுக்கு அதிகம் ஓடி வருவது அவரே
இதமாக ஈகையுடன் பேசுபவரே

உடல் உழைப்பை எங்கள் வளர்ச்சிக்கு வழங்கியவரே
உறவினர் - ஊரார் போற்ற வாழ்ந்தவரே
உயர்ந்த உள்ளம் உடையவரே
உயர்வுக்காக ஊக்கபடுத்துபவரே
உதவும் உள்ளம் உடையவரே
உத்தமனகா ஊர்போற்றவே வாழ்ந்தவரே

ஊக்கமாக ஊழ்வினை நீக்கி வாழ்ந்தவரே
எங்கள் ஏற்றம் கணடு மகிழ்ந்தவரே
ஊர் ஊராக சுற்றி உழைத்து உயர்ந்தவரே
எங்கும் ஏற்றம் பெற திறம்பட உழைத்தவரே
ஊருக்கே ஊக்கப்படுத்திட உழைத்தவரே
எல்லோரும் ஏகந்தமாக வாழ வைத்தவரே

ஏர் பிடிக்க ஏற்றம் இறைக்க போதித்தவரே
ஏனோ ஐந்தெழுத்து படிக்காத மேதையே
ஏகபோக ஏகந்தமாக வாழந்தவரே
ஏனென்ற ஐய்யமின்றி வாழ்ந்தவரே
ஏடெடுத்து ஏற்றம் பெற வளர்த்தவரே
ஏக்கம் ஐக்கியம் கொள்ளா வண்ணம் வளர்ந்தவரே



கவிஞர் மு. கவிபாலன் (எ) மு. சோமசுந்தரம், சிதம்பரம்

# வாழ்வின் நிச்சயம்

தண்ணீர் இல்லையென்றால் தரணி தாங்காது
தாகம் போக்கியே தன்னிகராய் தொழிற்படும்

திங்கள் மலராவிட்டால் தினங்களும் மாறாது
தீயன களைந்திடத் திருப்பங்கள் தந்திடும்

துன்பங்களைத் துரத்திட துணிவேதான் துணை
துயர்கள் அண்டவிடாது உத்வேகத்துடன் போராடு

தூற்றுவோர் தூற்றட்டும் போற்றுவோர் போற்றட்டும்
தெளிந்த சிந்தனையுடன் நாட்களைக் கழித்திடு


தேவையற்ற விடயங்களைத் தேடுவதைத் தடுத்து
தேக ஆரோக்கியத்தைத் திடமாய்ப் பெற்றிடு

தையலின் அறிவும் தைரியம் தந்திடும்
மையல் கொண்டிடாது சிந்தித்துப் பயணித்திடு

தொண்டு செய்யும் நல்லெண்ணம் கொண்டிடு
தொடர்ந்திடும் சேவைகளால் மனது குளிர்ந்திடும்

தோல்விகளைக் கண்டு சோர்வடைந்து நிற்காதே
தோல்வியும் வெற்றியும் வாழ்க்கையைப் பதமாக்கும்

தௌதிகம் பவளம் கோடி கிடைத்தாலும்
அகந்தை கொள்ளாமல் வாழ்ந்திடப் பழகிடு



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹார், இலங்கை

# தையில் புதியதை விதைப்போம்!

ஈரடியில் உலகம் போற்றிடும் உன்னதத்தை தந்தும்
கீழடியில் அதன் உதாரணத்தைக் காட்டியும்
தன்னிகரற்று தனிநடை போடும்
தமிழின் மென்மையை
தரணியில் யாவரின் மனதிலும் தரமாய் சேர்ப்போம்!

ஆயிரம் கல் தொலைவிற்கு அப்பாலிருந்தாலும்
'யாவரும் எமக்கு கேளிரே' என்ற பதத்தின்
பக்குவத்தைப் பலருக்கும் காட்டிடும்
பண்பினில் பாரினை வியக்க வைப்போம்!

அகமென்றும் புறமென்றும் வாழ்வை வகுத்தளித்த
வரைமுறைகளை வரும் தலைமுறைக்கு
வண்ணமயமாய் வழங்கிடுவோம்
வாழ்வாங்கு வாழ்ந்திடவே!

அனைத்து உயிர்களுக்கும் அன்பையே
அளவிலாது வழங்கும் பண்பைப்
பக்குவமாய் கடத்திடுவோம்;
அறம் கூறும் அறிவுப்பெட்டகத்திலிருந்து,
அறிவியலுக்கும் வித்திட்டு,
அறிவையே அரணாய் அமைத்து,
அன்பினாலே அகிலமும் மகிழ்ந்திடவே
இத்தையில் - எண்ணத்'தை' பக்குவத்'தை'
பண்பை அன்பை என
பல வித்'தை' புதியதாய் வி'தை'ப்போம்!



கவிஞர் ச. பிரகாசமேரி, உடப்பன்குளம் (தென்காசி மாவட்டம்)

# இன்பம் கோடி

அன்பு நட்பு பாசமென மனிதநேயம்
தழைத்திடவே ஒன்றுபட்டு
வாழ்வினிலே கூட்டுறவாய்
வாழ்ந்திடுவோம்.

ஒற்றுமை என்னும் *இரும்புக்கோட்டை*
உறவாக வளர்ந்திடுமே
கற்ற கல்வி அறிவு எல்லாம்
சமூகத்தின் உயர்வுக்கு பயன்படும்
எண்ணம் கொண்டு பாடுபடும் மனிதனே
மனிதனில் *தெய்வமாய்*
நெஞ்சில் என்றும் வாழ்வானே.

குரோதம் விரோதம் வன்மம் என்னும்
கெட்ட செயல் ஒழிந்திடவே
நாளும் மலரும் *நட்( பு )பூக்கள்*
அன்பு என்னும் செயலாலே அகிலமே வசமாகும்.
அன்பு மட்டும் இல்லை என்றால்
வாழ்வதிலே அர்த்தம் இல்லை.

மண்ணில் இந்த வாழ்வெல்லாம்
மக்கள் பயனுற வாழ்வதே
எதிர்வரும் தலைமுறைக்கு
விட்டு செல்லும் பொக்கிஷம் என்பதை
மறப்பவர் வாழ்வதிலே பயனில்லை.

வன்முறை இல்லாத அகிம்சை கொண்டு பகை விரட்ட
மகாத்மா காந்தியின் மந்திரம் போதுமே
உலகை இயக்கும் சக்தியாய் மனிதநேயம் விளங்கட்டும்
மனம் மகிழ்வான வாழ்க்கையே *இன்பம் கோடி* தந்திடுமே



கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், தேத்தியாதோப்பு

# அதென்ன குற்றமா?



பெண்ணென்றவளுக்கு வருத்தமென்று
இறைவன் கொடுத்தது தானே.
அவ்வாறிருக்க ஏன்
இவ்வாறு ஒழித்து மறைக்க ..

மாதவிடாய் என்பது
பெண்ணின் ஆரோக்கியத்தின் அங்கமென்று
விளம்பரமொன்று தொலைக்காட்சியில்
பரவக்கண்டேன்.

உன் வலி தான் என்னவென்று
உனக்குள் நீ புதைப்பது தான் ஏனோ?
தந்தையாய் சகோதரனாய் பிள்ளையாய்
உறவுகளிடம் தான் நீ மறைப்பது ஏன்?
வெட்கமென்றதாலா? வெறுத்து போகுமென்றா?

சிறு சிறு தவறென்றதும் பொறுத்துக் கொள்ள முடியாத
மனிதங்கள் வெகுண்டெழுந்து வார்த்தை தீயினை
அள்ளி எறிய நீயும் சொல்லி தானே புரிய வைக்க வேண்டும்.
மாதத்தில் இத்தனை நாட்கள் உன் அவதிக்காக கடக்கும்.
அவ்வாறு வலி என்றாலும் உனகென பணி தான் நின்று போகுமா?

அடிவயிரை அழுத்திப் பிடித்து அமர்ந்து இருப்பாய் அல்லவா
கணவன் வந்து விடுவார் பிள்ளை வந்து விடுவார்
பசி தீர்க்கனுமென்று வலியை விட்டுட்டு
பணியைத் தொடர்ந்திருப்பாயல்லவா?

உப்பு போட மறந்து காரமேத்தி இருப்பாய்
காதை கிழிக்க ஏசும்போது சொல்லி தான் பாரேன்.
பெண்ணே இது மளைத்து போட பழுது பொருளுமல்ல
திருட்டு பொருளுமல்ல.

இறையோன் நியதித்த பெண்மைக்கானதே
வலித்திடும் ஓர் நொடிக்கும்
பிரார்த்தனை செய்திட மறவாதே.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், இலங்கை

# இறைவனின் கிறுக்கல்கள்



மைக்கல் ஆஞ்சலோவென்ன
பின்னால் வந்த ரபாயலென்ன
அவனின் "ஆகுக"
எனும் அபூர்வ தூரிகையின்
விசிறல்களுக்கு முன்னால்..
அத்தனை பேரும்
தோற்றுப் போனறன்றோ!

லியோனார்டோ டாவின்சியென்ன
பின்னால் வந்த
பப்லோ பிகாஸோவென்ன
அத்தனை பேரும்
அற்புதப்படைப்பாளன்
அவனது அதிசயக் கிறுக்கல்களில்
பிறந்த பிரதிகளன்றோ!

மர்லின் மன்றோ வென்ன
பிந்திப் பிறந்த சிற்பிகளென்ன
மண்ணில் மலைகள் செதுக்கி
விண்ணில் கோலங்கள் வரைந்திட
மறந்தவை மறையில் உணர்த்திட
அர்ஷின் அரசன் அவனே அவனன்றோ!

மலை முகடுகளில் பரவிடும்
பனிச்சாரல்கள்; வளைந்து நெளியும்
நதிகளின் ஊறல்கள்.
அடிவானின் அழகிய வர்ணங்கள்
பூமியின் விளைநில விந்தைகள்
பூதல மாந்தர் நாம் கண்டு வியந்திட
அவனது அற்புதமன்றோ!

கவிஞர் செண்பகச்சோலையாள் ஆய்ஷ்

# அம்மா

அம்மா கடைசிவரை சமையலறை
சிறை பறவையாய்

சாதத்தின் பதம் பார்த்தும்
பட்டினியாய் இருப்பவள்

சாம்பாருடன் தினந்தோறும்
கூட்டாய் ஆனவள்

மளிகை பொருட்களுடன்
மாயமாய் மறைந்து வாழ்பவள்

மரணம் வரை பாத்திரங்களுடன்
மட்டுமே பாதயாத்திரை செல்பவள்

இவளின் முகவரி அடுக்களையில்
கரி பிடித்த வண்ணங்களாய்

இவள் ஒரு மெழுகுவர்த்தி
சமையலறையில் மட்டுமே வெளிச்சமாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# பேதை

பேதைப் பெண்ணின் சிரிப்பிலும்
பேச்சு மூச்சற்ற மனிதன் உயிர் பிழைத்த நேரத்திலும்
பேட்டி கொடுக்கையிலே வெற்றி அடைந்தவருக்குமே
பேணி காத்து பிள்ளையை மணம் செய்து கொடுக்கையிலே

பேதமில்லாமல் ஆலயம் செல்கையிலே
பேந்த விழிக்கும்போது வழி புரிகையிலே
பேத்தி தாத்தா பாட்டி என்றழைக்கையிலே
பேழையாக முதல் பரிசு கிடைக்கையிலே

பேரைச் சொல்லி செல்லமாக நட்புக்கள் அழைக்கையிலே
பேரிடர் முடிந்து இன்பம் வருகையிலே
பேரோடு நமது கவி நூலில் ஒளிர்கையிலே
பேசாத இனியவர் பேசுகையிலே

பேசிக் கதைகள் கதைக்கையிலே
பேசகி ஆசிர்வதிக்கையிலே (யானை)
(கூடை)
பேடிகையாய் நமக்கு நல்லது நடக்கையிலே
பேதானா துளிர்த்து முளைக்கியிலே (ஒரு விதை)
பேம் நீங்கி துணிவு எழுகையிலே (பயம்)

பேரண்டமும் தெளிவாய் அறிகையிலே
பேராண்டு மணவிழா கொண்டாடுகையிலே
பேரொலிக்கு பின் அமைதியில் ஆழ்கையிலே
பேருந்தில் கூட்டத்தில் இடம் கிடைக்கையிலே

பேருயிரும் தென்றலாய் வீசுகையிலே
பேராழியில் மகிழ்வோடு விளையாடுகையிலே
பேறுகாலம் முடிந்து உயிரை பிறப்பிக்கையிலே
பேரானந்தமும் பெரிய ஆனந்தமாகிடுதே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆத்தூர்

# மனமே நலமா

மனதிடம் கேட்டேன்
நலமா என்று
நீ கோபப்படாதவரை
நான் நலமே என்றது

யாரையும்
காயங்கள் செய்யாமல்
உன் அன்பால் எனை
கட்டி வைத்திருக்கிறாயே

வார்த்தைகள் குறைத்து
எனை வலிமையாக்கி வைத்துள்ளாய்
நான் நலமே என்றது மனம்

என் இனிய மனம்
எங்ஙனம் சொல்வேன்
சுழற்றும் நாவிற்கு இனிப்பொன்று தந்தேன்
ஆம் மௌனம் தான்

துரித சொல்லடக்கப் புன்னகை விதைத்தேன்
வழக்காகும் வார்த்தைகளை
கடந்து போக பழகிவிட்டேன்

நேசிக்கும் மனதை நிறைவுக்குள்
புகுத்திக் கொண்டேன்

மகிழ்வுடனே நான் எனை
நேசிக்கவும் மறக்கவில்லை
நலமாய் இருப்பாய் மனமே
நான் நானாக இருக்கும் வரை
நீ நலமாய் இருப்பாய்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

# நேற்று

"நேற்று" விடைபெற்றது
அது மீண்டும் வராது !
வரவேண்டிய "நாளை"
அது வந்தே ஆக வேண்டும்.
**

எத்தனை எத்தனையோ?
இயற்கைக் காட்சிகள்!
அத்தனையும் காணாத
கண்கள் தான் எத்தனையோ?
**

உடலுக்குள் இருக்கிறதாம்
உருவம் இல்லாத மனம்!
தேடுகின்ற மனத்துக்கு
சாட்சி எப்படிக் கிடைக்கும்?
**

மனமெனும் மேசை மீது
பிரச்சனைகள் எனும் காகிதங்கள்!
காற்றில் பறக்க விடுங்கள்
பேப்பர்வெயிட் தேவைப்படாது.



கவிஞர் சே.ரா. ஸ்ரீதரன், இலங்கை

# வாசல்

அலைபேசிக்குள் சுருங்கும்
உலகக் கதவுகளுக்கு
ஜன்னல் கம்பிகள்
பொருத்தமாகின்றன
மரச் சட்டகங்களில்
கம்பிகளும் காணாமல் போக
அலைபேசி விட்டு
அகம் திரும்பும்
கண்களுக்கு
மீண்டும் கிடைக்கிறது
பேரண்டப் பெருவாசல்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# நான் மரம் பேசுகிறேன்



காய்க்கும் மரம் கல்லடி பட்டு போகுமாம்
எனக்கு கல்லடி மட்டும் தான் கிடைத்தது!
கண் அடியும் பட்டு அல்லவா நிற்கிறேனே பட்ட மரமாக!
நான் நிழல் தரும் மரமென்று இளைப்பாறினோர் பலருண்டு
அவனும், அவளும் இணைபிரியா காதல் கிளிகளாய்வந்து
இனிய கதை பேசியே களித்திட்டார்களே!
இன்று மங்கை மட்டுமே,

நான் பட்டுப்போன பின்னும் அழுதுட்டே செல்கிறாளே!
நாயகன் மாயமாய் மறைந்தினனோ!
தினம், தினம் வருகிறாள்.
என் நிழலே இல்லாவிடினும் ஏறெடுத்து
பார்த்து, பார்த்து பெருமூச்சு விட்டுத்தான் போகிறாளே!

உன்னை போலவே நானும் ஆகிவிட்டேனே
என்று நினைத்திட்டாளோ!
அவள் முகமும் தான் வாடி தான் போனதே!
கால தேவனின் காலச்சக்கரத்தில்
பருவங்கள் மாறி வசந்தம் தான் வந்ததே!
என் மீதும் வானில் இருந்து விழுந்த மழைநீர்
எனக்கு உயிரை நல்கியது.

இதோ நானும் பூத்துக் குலுங்குகின்றேன்.
இணைபிரியாமல் இருந்து,
துணை பிரிந்த ஒற்றை பறவையாக இருந்த அவள்,
கலகலவென சிரித்தபடியே ஜோடி சேர்ந்த புறாக்களை போல்
அவர்கள் மீண்டும் என் மடியில்.
பனித்துளி போல் என் கண்ணில் ஆனந்தக் கண்ணீர்.
எங்கேயோ வீசிய தென்றல் காற்றில் விழுந்த பூக்கள்
என் குழந்தைகளுக்கு ஆசிர்வாதம் தந்தனவோ!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# கற்பனைக் காதலி

பார்வையில் எத்தனையோ
ரீல்ஸ்.
விரல்கள் தள்ளி தள்ளி
சோர்வுற.

இரவுகள் துரத்தும் சுமையாய்
இமைகள் இளைப்பாற
இம்சையான அலைப்பேசி
விரல் தவற

ஆசைகளின் நுழைவாயிலில்
பாதச்சுவடைப் பதிக்க
கற்பனையின் காதலியாய்
கனவுகளின் ராணியாய்
சித்திரம் தீட்டும் ஆசைகளும்.

எக்கச்சக்கமாய் கவிப்புத்தகத்தின்
அடிமையாய் ஆரவாரித்து
முடித்த பக்கங்களின் இடையில்
பிறையை சைட்டடிக்கும்
பிரியை தான் யானோ.

ஆவலாய் புகைப்படம் பிடிக்க
பதிவிட விரலெடுத்த இன்ஸ்டாவில்
தயக்கங்கள் எண்ணற்று
இருப்பினும் ஏக்கங்களும்
எல்லையற்ற குவியலாய்.



கவிஞர் சு.கார்த்திகா, பழநி

# மழைக்கால தவளைகள்



சிப்பிகள்
முத்துக்களை இழந்த பின்
முற்றத்திற்கு வருகின்றன
சுண்ணாம்புச் சாந்தாக.

எங்கள் ஊர்
குடிகாரன்கள் காலையில்
சூரியன் வீட்டில்
சூரிய நமஸ்காரமும்
மாலையில்
சந்திரன் வீட்டில்
சந்திர நமஸ்காரமும்
தவராது செய்வார்கள்.

பல்லக்குத்
தூக்குபவன் ஆடுகிறான்
சாமியேறியா? சாராயம் கூடியா?

தனிமை
நாடியவன் எடுத்துச்
சென்றான் சபையை
திறன்பேசியில்.

செடிகளை முகர்ந்து
பார்த்து பன்னீர்
தெளிக்கின்றது
நாய்.

குமரிகளைக் காணாமல்
வற்றிப் போனது ஆறு
பைப்லைன் வந்த பின்.


நெல் அறுவை
இயந்திரம் வருகை
காணாமல் போயின
களவட்டிகளும் சூட்டுப் போரும்.

நெடுஞ்சாலை நெடுக
இறைச்சித் துண்டுகள்
மழைக்கால தவளைகள்.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு, (இலங்கை)

## நாச்சியார்தம் திருமொழியின் பதிநான்கு பட்டிமேய்த்தோன் 6-10 5

கோதைதமிழ் பதிநான்காம் திருமொழியில் பட்டிமேய்த்தோர்
காரேறு பாசுரங்கள் ஆறுமுதல் பத்துவரை
ஐந்தினையும் ஈண்டுகாண்போம்! அறுசீர்கொள் ஆசிரிய
விருத்தவகை அமைந்ததுவே! நாற்றுமுப்பத் தொன்பதாவது
பாசுரமாம் ஆறதனில் விருந்தாவன் காட்சிதந்த
கண்ணனையே காட்டினளே! நீதிநெறி நில்லாத
குறும்பனவன் கையமைந்த வில்லேபோல் புருவத்தான்!
துன்பளிப்போன் கருமேனி விரும்புவோருடன் பொருந்தாது
எழுகதிர்போல் தோன்றுமுகன் செம்முகத்தோன் இருமலையிடை
பொருத்தமுடை மாண்தலைவன் எழில்காணீர்! என்னுள்ளம்
புறத்தேயும் அகத்தேயும் கருமையன்! எண்ணத்திற்
கெட்டாது தப்பிநிற்போன்! கார்மேகம் போன்றமைந்தோன்!
நட்சத்திர நிறைவானம் போல்பக்தர் சூழலுற்றோன்!
விருந்தாவன காட்சியோனே! சங்குடையான் பட்டுடையான்
ஆழியினான் களிவண்டு கலந்தார்க்கும் கமர்பூங்குழல்
மிளிர்ந்திடு தடந்தோளன்! கண்ணனவன் பிருந்தாவனச்
சூழலினான்! உஞ்சித்தா மரைபோன்று நான்முகனை
உலகாக்க வைத்திட்டே விளையாடு மால்கண்ணன்!
அசுரனையும் யானையினை பறவைதனை ஒருசேர
மாய்த்திட்டே காற்தடத்தே வேட்டையது ஆடினனே!
அக்கண்ணன் விருந்தாவன் தோற்றத்தன்! முதலைவாய்
கவ்வுயானை பருத்தக்கால் விடுவித்த ஆதிமூலன்!
கஜேந்திரந்தன் மோட்சமது சேர்த்திட்டோன்! பெரியாழ்வார்
திருமொழியும் கோதைதன் திருவாய்மொழி தன்னையும்
மனத்திருத்தும் மாலடியார் கண்ணந்தன் திருவடிகள்
சரண்புகுந்து நீடுவரே! கோதைதன் திருவாய்மொழி
முற்றிற்று! ஆழ்வார்கள் பதின்மரிங்கு தவழ்ந்திட்டார்!
தொண்டரடிப் பொடியுடனே பாணாழ்வார் தொடர்வோமே!
பன்னிருவர் பேரருளால் வைணவத்தை போற்றுவமே!
இன்னருளைப் பெற்றிட்டே மாலருளால் ஓங்குவமே!




கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# மௌன மொழி!

ஆழ்மனதின் வலிமையினை அறிவிக்கும் மொழி!
மொழிகள் மூர்ச்சையாகும் அழகிய தருணத்தே
விழிகளின் உரையாடல் பரிமாறும் மொழி!
வலியோர்முன் எளியோர்கள் வெளிப்படுத்தும் மொழி!
கற்றறிந்தோர் சபைகளிலே கல்லாதோரின் மொழி!
பிரிந்து சேர்கையிலே பெண்மை பேசும்மொழி!
சம்மதம் என்பதையும் சாற்றிடும் இம்மொழி!
எம்மொழி? விடையாகும் மௌன மொழி!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# எங்கே போகிறது இந்த வாழ்க்கை?



தினம் தலைக் குனிந்து
கையளவு செல் ஃபோனில்
கடந்து போகுது இன்றும்

ஏதோ இந்த வாழ்க்கை
கொஞ்சம் வன்முறையையும்
ஒரு காதலையும் இணைத்து
புதிதாக ஒரு இடம் குடும்பம்.

வேடமிட்டு நடிக்கும் உறவிடம்
வேடம் போட தெரியாமல்
வந்தவர்கள் அனைவரும்
ஆளுக்கு ஒரு வித்தைக்
கத்துக்கொடுத்தனர்
இப்படித்தான் உறவு என்று.
பிறகு எங்கு போவது

போகும் வழித் தெரிந்திருந்தால்
நீர் எப்பொழுது கடலில் சேர்ந்திருக்கும்
தெரியாது என்பதால் தானே
தனக்கான பாதையை
தேடிக் கடலைச் சேருகிறது.

மரம் ஒன்றுதான் ஆனால்
அதன் கிளைகள் நிறைய
தினமும் எத்தனையோ குருவிகள்
உட்கார்ந்துப் பசியாறுகிறது.

ஒரு வாழ்க்கை
ஒவ்வொரு கணமும்
ஓராயிரம் பொய் பேசுது

மெய் என நினைத்து
மெதுவாக நடந்த பார்
எங்கே போகிறது
இந்த வாழ்க்கை? என்று

கவிஞர் தே. செ. பிரகாஷ், செஞ்சி

# சொல்ல மறந்த காதல் கதை

கண்களால் உன்னை கைது செய்து
காதலினால் திளைக்கச் செய்து

அன்பினால் மூச்சு முட்டச் செய்து
பாசத்தை பக்குவமாய் தந்து

இன்பத்தை இனியதாய் கொடுத்து
ஈரடிக் குறளாய் வாழ்ந்திட ஆவலுடன் நடந்தேன்

அனைத்தையும் செய்திட வழியற்று
பித்துப் பிடித்தாற் போல நின்றிட்டேன்

மனதில் நுழைந்த காதலை உன்னிடம் கூற வழியின்றி
பிறகு கூறலாமென நினைத்திருந்தேன்

அழகான காதல் அமைதியாய் இருந்தது
சொல்ல மறந்த காதலாய் இன்னும் அழகாகவே.



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# காதல்



உடைந்து நிற்கும் போது
என்னை அணைத்துக் கொள்கிறாய் !
என்னுள் நான் காணத
விடயத்தை நீகண்டு மகிழ்கிறாய்!
நித்தமும் காதலை அதிகரிக்கிறாய்!
தினமும் நம்பிக்கை தருகிறாய்
நாளும் மையல்கொள்ள வைக்கிறாய்
எதிர்பாராத விடயத்தைச் செய்து
ஆச்சரியப்பட வைக்கிறாய்!
எழில் கூட்டுதே உன்
அனைத்து செயல்களும்!
என்ன அன்பானவனே!

கவிஞர் ஜெயா ஸ்ரீ, லண்டன்

# வறுமையின் நரகம்



பின்னணிகளின் படமே நரகம்
நம் விழிகள் மூட மறுக்கிறது
முன்னேற ஒரு பாதை தேடி
முரண்படும் உறவுகள் முட்டாள்தனமான நட்புகள்
அன்று நேற்று இன்று நம்பிய வாழ்க்கைப் பயணங்கள்
பயன்படாத ஒரு காகிதமா
இன்று தூக்கி எறியப்பட்ட பின்பு
மீண்டும் புதுமைப் பெற விரும்புகிறது
மனம் நம்பிக்கை மட்டும் எண்ணி
இழந்ததை மறந்து மறந்ததை கடந்து
வாழ்க்கை தந்த வறுமையின் பின்னணியை
முன்னணியாக மாற்றி மாற்றம் பெறுவோம்
மாறுதல் அடைவோம் பல மாய பின்னணியில்
கண நொடியில் நம்பிக்கை வை
மனதுடியில் வென்று வா
வறுமையும் வாழ்க்கையும் வழிவிடும்
ஒரு விடிவெள்ளி சுடராய்
சுற்றத்தையும் சூழ்நிலையும் கையாள
கனவு கொள் களம் வெல்.

கவிஞர் ம. செல்லமுத்து, நூர்த்தப்பூர்

# சிந்தனை செய் மனமே



நாளும் ஒவ்வொரு புதினம் காத்திருப்பு
கடமை காலத்துடன் சேர்ந்து ஓட்டம்
பிறர் மீதான உன் பார்வை ஒப்பீடு
பக்குவப்பட்ட மனத்திற்கு வீண் துன்புறுத்தல்

பாதைகள் பல ஆனால் உன் திசை ?
இலக்கின் ஏக்கம் படைப்பை உனதாக்கும்
உண்மையின் பயிற்சி கனவை நனவாக்கும்

தேடலின் காரணம் உன்னை பிரதிபலிக்கும்
தேகத்தின் இரசணை கூட மறக்கும்
மனிதம் உன்னில் பற்றுள்ளம் கொண்டிருக்கும்

சலனம் தந்த கலக்க தெளிவு
வயதின் படிப்பினை உணர்த்தி நிற்கும்
பிறர் இட நாட வெறுக்கும்

வேடிக்கை பயன் தரா வேதனைகள்
நேரத்தில் நாம் தோற்ற கணங்கள்
உதவிக்கு நாடா உறவை முறிக்கும்

முகம் கொடுக்கா தனி வரவு
தன் கையே தனக்கு உதவி
உணர் பாடம் நல்வகை உணர்த்தும்

கவிஞர் வியாத்தீன். சி. லக்ஷிஹரன்

# அதன்பெயர்

வாசிப்பு சொல்லிக்கொடுத்த
’யோசிப்பு’

சுயபுத்தியால் கிடைத்த
’விஷயங்கள்’

கேட்டதாலும், பார்த்தாலும்
அறிந்த ’விஷயங்கள்’

சொல்லிக்கொடுக்கப்பட்டதால்
கிடைத்த ’அறிவு’

இவைதவிர
யதார்த்த வாழ்க்கை
சொல்லிக் கொடுக்கும் பாடம்
அதன்பெயர்
’அனுபவம்’.



கவிஞர் சந்திரராஜன்

# காதல் இல்லாக் காதல் ஹைக்கூக்கள்

மழை நனைத்தபின்
மனம் அணைக்கிறது
உள்ளே எரிகிறது தீ
*

ஏதும் செய்யாதிருக்கிறாய்
மனமே காயமாக்கி
மனதில் ரணம்
*

துடைக்க மனசில்லை
கைக்குட்டை
உன் பரிசு
*

முத்தப் படகு
மெதுவாய்ப் போகட்டும்
மேனி நதியில்
*

குளிர் பார்வை வேண்டி
உள்ளே எரிகின்றேன்
கோடையாய் நீ
*

நியூட்டனுக்குப் புரியாது
உன் ஈர்ப்பு
நானறிவேன்
*

என் வழித்தடத்தில்
விழாக் கொண்டாட்டம்
நீ வருகிறாய்
*

நாளை பார்க்கலாம்
கால்கள் திரும்பியும்
கண்கள் பிரியாமல்.
*

உன் மௌனத்தால்
மனக்காயம்
ரத்தக்கண்ணீரென
*

உளறுகிறேன்
உன் முத்தம்
சூடேற்றும் என்னை.
*

என்னை விரும்பு
என் பிராத்தனையில்
அழகாகிறாய் நீ



கவிஞர் இளையவன் சிவா

புங்கை போல
குளிர்ந்தவள்
நங்கை
***

நகர்ந்து கொண்டே இருக்கிறார்கள்
எப்பொழுதும் முடிவு செய்வதே இல்லை
இதுதான் வாழ்க்கை என்று பெண்கள்
***

ஆண்ட்ராய்டு சார்ஜர் ஸ்விட்சுகள்
அணைக்கபடுவதில்லை
அது போல அவள் நினைவும்
***

ஏழைகளின்
எண்ணமெல்லாம்
அன்னமே
***

ஒட்டுங்கள்
நோட்டீஸ்
அதற்கான இடங்களில்
***

தன் எழுத்தை வாசித்து பார்க்கும்
எழுத்தாளன்
அந்த எழுத்தின் மும்முதல் வாசகன்
****

என் நண்பன்
மனதிற்கான
வாக்கம் கிளீனர்
****



சிலரின் கோபம்
அவர் மீதான ஆசையை
தூண்டும்
****

சட்டிக்குள்
சொத்து
பூச்செடி
****

விடியற்காலையில்
4 ஏக்கராவிற்கு நீர் பாய்ச்சிய நான் ,
இன்று கிரொடன்ஸ் செடிக்கு வாட்டர்
ஸ்ப்ரே செய்கிறேன்
ரூமில் சென்னையில்
படித்து முன்னேறி

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

அத்தியாயம் 13- இன்னும் பயம் போகலையா?

தான் தங்கியிருந்த கெஸ்ட்ஹவுசில் கீழே இறங்கி இருந்த காவல் அமைப்பை ஒரு முறை சரிபார்த்துக் கொண்டு மேலே வந்த போது "என்ன தலைவரே, இன்னும் பயம் போகலையா?" என்று கேட்டார் வட்டத் தலைவர் மணவாளன்.



"உனக்கென்னையா? ஊரிலேயிருந்து நேரே பூனாவிற்கு வந்ததாலே நடந்தது எதுவும் நேரடியாகப் புரியலே. உயிர் பயம் எப்படி என்பதை நான் நேரிலே அனுபவிச்சவன். எதற்கும் ஒரு முறை சரி பார்த்துக்கலாம்னுதான் கீழே வந்தேன். அவன் எமகாத பய... எனக்கென்னவோ ரயில்லேயிருந்து கீழே விழுந்தாலும் அவன் செத்திருப்பான்னு தோணலை. ரயில்லே அவன் முகம் மாதரி ஜன்னலில் பார்த்ததும் அப்படியே ஒருமுறை ஆடிப் போயிட்டேன். அப்புறம் தான் பிரமை என்று தெரிந்து நானே என்னை சுதாரிச்சுக்கிட்டேன். என்ன நம்ம அயிட்டமெல்லாம் கூட்டியாந்திருக்கியா?" என்றார் மந்திரி வலம்புரி மாதவன்.

தலையை சொறிந்து கொண்டிருந்த மணவாளனைப் பார்த்து "என்னையா பதில் சொல்லாமல் முழிக்கிறே. புவனா எங்கே? திரும்பவும் கத்தினார்.

"சார்... புவனாவிற்கு உடம்பு சரியில்லே, இங்கேயே ..." என்று மணவாளன் இழுக்க... "போய்யா... உன்னையார் பூனாவிற்கு கூப்பிட்டது.புவனாவிற்கு துணைவேண்டுமே என்று தான் உன்னையே வரச் சொன்னேன். சரி, எப்படியும்போ. குடிக்கிறதுக்கு தயார் பண்ணு. குளிச்சிட்டுவ ருகிறேன்." என்று குளியலறைக்குள் நுழைந்தார் மந்திரி.

மணவாளன் கீழே தொலை பேசியில் தொடர்பு கொண்டு என்னவெல்லாம் தேவை என்று சொல்லி கொண்டு வரச்சொல்லிவிட்டு, குளிர் சாதனப்பெட்டியைத் திறந்து வெளிநாட்டுப் புட்டியை எடுத்து இரண்டு கப்களில் நிரப்பி சோடா விட்டு, கடிப்பதற்கு வேண்டிய கொல்லாங்கொட்டை பருப்பு,

கவிஞர் இரஜகைநிலவன்

காவல் மிகவும் கடுமையாக இருப்பதை உணர்ந்த பழனி, பின் சுவரில் மெதுவாக பல்லி மாதிரி ஊர்ந்து மேலே வந்து காம்பாவுண்ட் சுவரில் குத்தியிருந்த ஆணி, கம்பி, கண்ணாடித்துண்டுகளில் எங்கும் படாதபடி பார்த்துக் கொண்டு உள்ளே குதித்தான்.

பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டபோது , அந்த அலுமினிய துப்பாக்கி "நான் அமைதியாக இருக்கிறேன். எப்போது உபயோகிக்கப் போகிறாய்?"என்று கேட்டது.

ஆற்று நீரில் நனைந்த பிறகும் விசுவாசமாக உதவி புரிய துணை வந்த துப்பாக்கியை இன்னொரு முறை எடுத்து துடைத்துக் கொண்ட போது, அவனை நோக்கி வெளிச்சம் சிதற ஓடிப் போய் அருகிலிருந்த மரத்தில் ஒளிந்து கொண்டான்.

டார்ச் எடுத்துக் கொண்டு சுற்றிப்பார்க்க வந்த காவலாளி எல்லாப் பக்கமும் வெளிச்சத்தைச் சிதறவிட்டு பதுகாப்பு சரியாக இருப்பதை பார்த்து பையிலிருந்த சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒரு சிகரெட் எடுத்து பற்ற வைத்த போது, பழனியின் நிழல் தெரிய வேகமாக அந்த மரத்தை நோக்கி ஓடி வந்தான். டார்ச் மூலம் வெளிச்சத்தை சிதற விட்டபடி ...

மரத்திற்குப் பின்னால் வந்து சுற்றிப் பார்த்து விட்டு யாரும் தென்படாமல் போக, திரும்பவும் ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டு சிகரெட்டை உள்ளே இழுத்து ஆழ உறிஞ்சு புகையை விட்டு விட்டு மெதுவாக வாசலை நோக்கி நடந்தான்.

மாட்டிக் கொள்வோமோ என்று பயந்து போன பழனி, மெதுவாக மரத்திலிருந்து கீழே இறங்கி கெஸ்ட் ஹவுசின் பின்னாலுள்ள குழாயில் தொற்றிக் கொண்டு ஏறினான்.

படுக்கையறையில் மேஜையில் புட்டியைச் சரித்து மதுவை பரிமாறிக் கொண்டிருந்த மணவாளனைப் பார்த்ததும் கோபம் உச்சிக்கு ஏறி கரை புரண்டோடியது. 'இவன் என் தங்கையை இந்த மந்திரிக்கு அறிமுகப் படுத்தியவன். இந்தக் காட்டுவாசி தான் இரக்கமில்லாமல் என் தங்கையை வலம்புரி மாதவன் கெடுப்பதற்கு முழுக்க முழுக்க உதவி செய்தவன்.' வேகமாக

அத்தியாயம் 13- இன்னும் பயம் போகலையா?

துப்பாக்கியை எடுத்து செயல்பட மணவாளன் எதிர்பாராமல் முதுகில் பாய்ந்த அமைதியான புல்லெட்டினால் இரத்தம் கொப்புளிக்க "அய்யோ" என்று பிடித்துக் கொண்டு சரிந்தான்.

"என்னாச்சி மணவாளன்..?" என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்த மந்திரி, இரத்த வெள்ளத்தில் சிதறிக் கிடந்த மணவாளனையும், தாழ்வாரத்தில் தென்பட்ட பழனியையும் பார்த்து உடனே கிரகித்துக் கொண்டு மேஜைக்குப் பாய, "மந்திரி இனி உன் தந்திர வேலைகள் எல்லாம் எடுபடாது. கையைத் தூக்கு, இல்லையெனில் மணவாளனின் கதைக்கு அடுத்த அத்தியாயம் நீ தான்." என்றுகத்தினான்.

அவன் சப்தம் இரைச்சலாகக் கேட்க கீழே இருந்து காவலர்கள் ஓடி வந்தார்கள். பழனி அமைதியாக்கப்பட்ட துப்பாக்கியால் குறிபார்க்க மந்திரி படுக்கையின் கீழே பாய்ந்து கொள்ள, குண்டுகள் சுவரில் துளைப் போட்டுக் கொண்டிருந்தன.

"கமான் காட்ச் ஹிம்"என்று காவல்படை தலைவன்ச ப்தமிட, வேகமாகக் கீழே குதித்தபழனி பாய்ந்து ஓட, காவலாளி குறி பார்த்த குண்டு கால் முட்டில் துளைத்து இரத்தம் சொட்ட, வேகமாக காம்பவுண்ட் சுவர் ஏறிக் குத்திக் கிழித்த கண்ணாடித் துண்டுகளையும் பொருட்படுத்தாமல் பிடித்து தம் கட்டிக்கொண்டு அடுத்தப்பக்கத்தில் விழுந்தவன், எதிரில் வந்தலாரியில் கைகாட்டி நிறுத்தி, நின்று, லாரிநின்றதும், பின்னால் ஏறிக் கொள்ள, ஓடி வந்தக் காவலாளிகள் சுவர்களிலும் சுற்றி இருந்த சாக்கடை, மரங்கள் எல்லாவற்றிலும் பழனியைத் தேடிக் கொண்டிருந்தனர்.

தொடரும்...

கவிஞர் இரஜகைநிலவன்

## நூல் அனுபவம்

| | | | |
|---|---|---|---|
| தொகுப்பாசிரியர்கள் | : அன்புச்செல்வி சுப்புராஜூ & ராஜூ ஆரோக்கியசாமி | | |
| நூல்வகை | : தன்முனைக் கவிதைகள் (தன்முனைக் கவிச்சாரல்) | | |
| வெளியீடு | : நூலேணி பதிப்பகம் | | |
| நூலின் பக்கங்கள் | : 156 | நூலின் விலை | : Rs.190 |

"ஹைபுன் , லிமர்புன் வகைமைகளில் தொகுப்பு நூல்கள் கொணர்ந்த எனக்கு , கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி அவர்களால் அவர்களால் அறிமுகமான தன்முனைக்கவிச்சாரல் வகைமையில் அவருடன் இணைந்து தொகுப்பு நூல் கொண்டு வர வேண்டும் என்ற ஆவல் உண்டானது.கேட்டதும் அன்புடன் இயைந்த தொகுப்பாசிரியர் அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்"

# கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ (தொகுப்பாசிரியர்)

நான்தான் அவருக்கு கடமைப் பட்டுள்ளேன். சக கவிஞர்களின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கும் பெரு உளம் கொண்டவர் அவர்... அவரின் கவி உழைப்பும்,தன்முனைக் கவிதை வளர்ச்சியில் அவரின் பெருத்த ஈடுபாடும் என்னைப் பெரிதும் கவர்ந்தவை. அவருக்கு என் பேரன்பின் பெரு வணக்கங்கள்!

நூலேணி பதிப்பகம் முன்னெடுக்கும் தன்முனைத் திருவிழா வரலாற்றில் இந்நூல் ஒரு மயில் கல்லாக அமைய வாழ்த்துகிறேன். "

# கன்னிக்கோவில் ராஜா, பதிப்பாசிரியர்.

பல்துறை பதிப்பாளருக்கு எங்கள் நன்றியும், வணக்கங்களும்!

சந்திர கிரகணம்

அன்று சந்திர கிரகணம். கிரகணத்தின் பொழுது யாரும் வீட்டை விட்டு வெளியே போகக்கூடாது என்று பாட்டி அம்முவிடம் அறிவுறுத்தினார்.

ஏன் பாட்டி போகக்கூடாது' அம்மு கேட்கவும்.. . ' நிலாவைப் பாம்பு விழுங்கும் போது... நீ வெளியே போனால் உன்னையும் சேர்த்து விழுங்கி விடும்.அதனால்தான் உள்ளேயே இருக்கச் சொல்கிறேன்' என்றார் பாட்டி.

"அட... போங்க பாட்டி, சூரியனுக்கும், சந்திரனுக்கும் நடுவில் பூமி வரும் நிகழ்வே 'சந்திர கிரகணம்' என்று எங்களின் ஆசிரியர் சொல்லியிருக்கிறார். அதை நாம் தொலைநோக்கி வழியாகப் பார்க்கலாம் பாட்டி என்று பாட்டிக்குப் பாடம் எடுத்தாள் பெயர்த்தி

## நூல் அனுபவம்

நிலாவை பாம்பு விழுங்கும்
பயம் காட்டினார் பாட்டி
நிலா, பூமி, சூரியன்
வகுப்பு எடுக்கிறாள் பெயர்த்தி

இந்தத் தன்முனைக் கவிச்சாரலை யார் எழுதியிருப்பார் என்று நினைக்கிறீர்கள்?
" இளங்கவியும் தன வயதை மீறியத் திறமையுடனும் , தமிழிலக்கியத்தில் பாட்டியின் ஆசியுடன் கால் பதித்தவருமான Prodigy (அசாதாரண புத்தி நுட்பமுள்ளவர்)பேபி சு.பிரவந்திகா அவர்களும் என்றால் மிகையாகாது."
இப்படி முனைவர்.புகழேந்தி அவர்கள் தம் அன்புரையில் குறிப்பிட்ட இளங்கவியின் கவிதையே அது. " நாங்கெல்லாம் எங்கே இருக்கிறோம்... நீங்க எங்கோ பின்னோக்கி " என்று பொட்டிலடிக்கும் கவிதை. வாருங்கள் எங்களோடு, நீங்களும் நவீனத்தை கை கொள்ளுங்கள் என்கிறார். சிறப்பான தன்முனைக் கவிச்சாரல்.

### கூர் தீட்டல்

அன்றைக்கு திருமணம் நிச்சயிக்க மாப்பிள்ளை வீட்டார் வருவதால் அவளின் வீடு மிகவும் பரபரப்பாக இருந்தது. உறவுகள், தோழிகள் நிறைந்து இருக்க... சமையல் வாசம் வீடு நிறைந்து இருந்தது.

"என்ன கண்ணு..." சிரித்தபடியே வந்த அன்னம்மா சித்தி, அவளின் பூவை சரிசெய்த படியே... " பார்க்க கொஞ்சம் அம்சமா இருக்க... அதான் பெரிய இடம் தேடி வந்துருக்கு... உடனே ரொம்ப சந்தோசப் பட்டுறாதே... அவங்க எதிர்பார்க்குறத செய்ய முடியலைனா திடீர்னு பொண்ண மாத்தினாலும் மாத்திடுவாங்க... அடங்கியே இரு... " சொல்லிவிட்டு நகரவும் " இவ திருந்தவே மாட்டாள்... எதையும் நெனைக்காம சந்தோசமா இரு..." பாட்டி ஆறுதலாக பேசினார்கள்.

அன்று மாப்பிள்ளை வீட்டார் வரவில்லை. பதிலாக தகவல்தான் வந்தது. "நாங்கள் அன்னம்மாவின் மகளை பேசி முடித்து விட்டோம். நீங்க வேற மாப்பிள்ளை பார்த்துக்கோங்க" என்று தகவல் வந்தது. எல்லாரும் சித்தியை அதிர்ச்சியாக பார்க்க... "வசதியான வீடு... அதான் இவங்கள விட பத்து பவுன் அதிகம் போடறேனு பேசி முடிச்சிட்டேன்... நாளைக்கு நிச்சயதார்த்தம், எல்லோரும் வந்துடுங்க...போயிட்டு வரேன்... " சித்தி போனதும் கவலைப்பட்ட அம்மாவைப் பார்த்து " அட... விடும்மா, நான் தப்பிச்சுட்டேன்" சொல்லியவள் அடுத்த வேலையைப் பார்க்க துள்ளிக் குதித்துக் கிளம்பினாள்.

கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

சார்புகள் அற்ற
கூர் தீட்டல்
தடைகள் அகற்றிடும்
வழி காட்டல்
# அன்புச்செல்வி சுப்புராஜூ

"பெண்ணுக்கு வேறு யாருமல்ல ... பெண்தான் எதிரி " என்ற கருத்தை வலியுறுத்தி கூர் தீட்டும் கவிச்சாரல் இது... கதை உத்தியிலான தமுக. இன்றைய கால கட்டத்தில், மிகக் கொடுமையான சமூகக் கொடுமையை, அற்புதமான சொல்லாடாலில் வெளிப்படுத்தி, வியர்க்க வைக்கும் கவிதை.

வாசிப்பு

இருபுறமும் இயற்கை எழில் சூழ்ந்த ஆற்றில் தோணியிற் செல்லுதல் போன்றது வாசிப்பு. துயரங்கள்,சலிப்புகளில் இருந்து மீட்டெடுக்கும். காதலுக்கு இணையானது...புத்தகக் காதல். பலருக்கும் தீராத போதை வாசிப்பு. குறுக்குச்சால் இல்லாத சீரான நடைபாதை.... நூலின் வரிகள். கவிதைகள் , கதைகள், உரைகள் என வாசிப்பின் தேசங்கள் எல்லையற்றவை. வாசிப்பு ஆழ்கிணறு தோண்டுதல் போன்றது... சிந்தனை ஊற்றுகள் படைப்புச்சுனைகளைத் தரும்.தொட்டணைத்தூறும் மணற்கேணி தானே வாசிப்பு...?

தேடித்தேடி வாசித்தல்
தீராப் பெரும்போதை
நூல்களின் வரிகள்
வாசகனின் நடைபாதை.

# லி.சீனிராஜ்

வாசிப்பின் அவசியமுணர்த்தும் விழிப்புணர்வு தமுக. வாசித்தால் தான் கவிஞன்... வாசிக்கா விட்டால் வெறும் கருத்தனே என்பதைச் சொல்லாமல் சொல்வதாய்...

புகை

தெரு முனையில் உள்ள நாயர் கடையில் இரண்டு டீ ஒன்னு சக்கரைத் தூக்கலாப் போட சொன்னான். ராஜி ஒரு டீயை பிரேம் கிட்ட கொடுத்தான் அவனும் டீயை வாங்கிக் கொண்டு பக்கத்தில் இருந்த பெட்டிக்கடையில் ஒரு சிகரெட் வாங்கிக் குபுகுபு எனப் புகையிட்டபடி டீயை குடித்தான். அப்ப ராஜி சற்று கோவத்தோடு "ஏண்டா இப்படி உன் உடம்பக் கெடுத்துக்குற தயவு செய்து இந்தச் சிகரெட்டை விட்டுவிடு" என்றான். ஆனால் பிரேமோ அதை எல்லாம் காதில் வாங்காமல், அவன் செய்ததையே திரும்பத் திரும்பச் செய்து கொண்டு இருந்தான். இப்படியே நாட்கள் உருண்டு ஓடியது. இருவரும் கொஞ்ச

## நூல் அனுபவம்

சில மாதம் கழித்து ராஜி மட்டும் டீக்கடைக்கு வந்தபோது நாயர்," எங்க பிரேமை ஆளையே காணோம், நீயும் ரொம்ப நாளைக்கு அப்புறம் வருகிறாய்" என கேட்டார். அதைக் கேட்டதும் ராஜியின் கண்கள் சற்றுக் கலங்கியது. காரணம் "பிரேம் தொடர்ந்து சிகரெட் பிடிக்கும் பழக்கத்தால், நுரையீரல் பாதித்து படுத்த படுக்கையா மருத்துவமனையில் உள்ளான்" என சொன்னான்.

நறநற எச்சரிக்கைகள் கேளாது
குபுகுபுவென புகைத்தான்.
கிடுகிடுவென நோய் முற்றி
மடமடவென முடிகிறது வாழ்க்கை.

# வேலாயுதம்.ந

இரட்டைக் கிளவி பாணியில் ஒரு அற்புதமான விழிப்புணர்வு தமுக. நிலையற்ற வாழ்க்கையின் அறியாமையை... அறிய வைக்க தன்முனைப்பூட்டுகிறது.

அப்பா

எப்பொழுதும் கண்டிப்பாக இருப்பவர். அதிகம் பேசாதவர். வேலை, அலுவலகம், செய்தித்தாள் என்று தன்னுடைய நேரத்தை செலவிடுபவர். அவர் வீட்டிற்கு வரும் வரை குட்டி, சுட்டிகளால் அமளி துமளிப்படும். அவர் திரும்பி வரும் நேரம் அல்லது ஸ்கூட்டர் சத்தம் கேட்டாலும் நூலகம் போல் வீடும் அமைதி ஆகிவிடும். எல்லா வேலையும் சரியாக நடக்கும். அவரிடம் எதைக் கேட்க வேண்டும் என்றாலும், அது அம்மாவின் வழியாகவே செல்லும். மொத்தத்தில் பக்கத்திலே இருந்தாலும் அவரை விட்டு தூரத்திலேயே விலகி நம் வளர்ந்திருப்போம். அவருக்குள் இருக்கும் பாசமும், அன்பும் வெளிப்பட பல தருணங்கள் அவை வெளிப்படாமலே போயிருக்கும்.

இருந்தும் அவை நமக்கு புரிந்ததே இல்லை. ஆனால் அவரின் சிந்தனை அந்த குடும்பத்தை சுற்றி மட்டுமே வட்டமிடும். குடும்பத்தினரின் நலனில் அதிக அக்கறை கொண்டவர். அவருக்கு நிகர் அவரே அவருக்குள் எப்போதும் தாய்மை உணர்வு இருக்கும். அதை இறுதிவரை நாம் புரிந்து கொள்வதே இல்லை. புரிந்துணர்வு வருகையில் அவர் நம்மை விட்டுச் சென்ற தூரம் திரும்பி வர முடியாததாகி விடுகிறது.

குத்திய சிறு முள்ளால்
வெளியான துளி உதிரம்
பதறிய தந்தையின் அன்பில்
கண்டேன் தாய்மையை

கவிஞர் ராஜ் ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

## நூல் அனுபவம்

# இலாவண்யா மணிமுத்து , அவர்களின்... தந்தையின் தவிப்பை உணர்த்தும் தரமான தமுக. இதுதான் தன்முனைக் கவிதையின் பலம்.

காந்தியமே தகுதி

நேர்மையாய் வாழ வேண்டும் என்று சொல்லிக் கொடுத்த தொடக்கப் பள்ளி ஆசிரியரின் அறிவுரையை இன்றளவும் கீதையாக ஏற்று நடந்து வருபவன் பாலன். மிதிவண்டியில் அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தவன் இருசக்கர வாகனம் ஒன்றை வாங்கவும் நினைத்தான். அதற்காய் சிறுக சிறுக பணத்தையும் சேர்த்தான். ஓட்டுநர் உரிமம் விண்ணப்பித்தவனுக்கு ஒன்று மட்டும் பதிலாய் வந்தது. உனக்கு தகுதி இல்லை என்று.!



எட்டு போட்டும்
உரிமம் கிட்டவில்லை
காந்தியை இணைக்காததால்
உரிமைகள் எட்டவில்லை

# மா.பாலசுந்தரம்

அரிச்சந்திரனாய் வாழ்தல் எப்படி சாத்தியம்? நிதர்சனம் இடிக்க... எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள பழகுதல் சாலச்சிறந்தது... என்ற இன்றைய வாழ்க்கைத் தத்துவத்தை தோலுரிக்கும் தமுக. எப்போதுதான் திருந்தப் போகிறோம் நாம்?

ஆக...

" இந்த நூலில் 45 படைப்பாளர்கள் , படைப்புகளைப் படைத்திருக்கிறார்கள். ஒருவருக்கு மூன்று பக்கங்கள் ஒதுக்கப்பட்டு அவர்தம் தன்குறிப்புகளோடு அமைந்திருப்பது சிறப்பாக இருக்கிறது. ஒவ்வொருவரின் பார்வையும் சமூகம், இயற்கை, மொழி, அழகியல் ஆகிய கருப்பொருள்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. வயது வேறுபாடின்றி எழுதியிருக்கிற படைப்பாளர்கள் பலரின் படைப்புகளில் சில நாற்காலி நுனியில் அமர வைக்கின்றன. சில தேநீரோடு சிநேக கவிதைகளாக மாறுகின்றன. சில கண்களில் குருதிச்சிவப்பை கொட்டிவிட்டுப் போகின்றன.சில பெண்ணியம் பேசுகின்றன. ஒரு சில யாரும் அறியா வண்ணம் தன்வரலாறு பேசிவிட்டு அமைதிகாக்கின்றன. மொத்தத்தில் புதிய புதிய முயற்சிகளுக்கு, இதுபோன்றதொரு தளம் பயிற்சிக்களமாக அமைகிறது.இதனின்று பல படைப்பாளர்கள் தனித்தொரு நூலைக் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன் , பாராட்டுகிறேன்."

# உன்னைத் தேடு

## நூல் அனுபவம்

## புதுக்கவிதைகளின் பூங்கா

"கவிமணி" இரஜகை நிலவன் - உலக மொழிகளில் தமிழ் மொழியே முதன்மையான மொழியாகும். இதற்கு காரணம் இதன் இயல்பும், எளிமையும், இனிமையும் தான் என்றால் மிகையாகாது. பேச, எழுத, இலக்கியம், இலக்கண வரம்பு, பழமையும் இளமையும் போன்ற சிறப்புகள், செம்மொழி என அழைக்கப்பட மொழியியல் வல்லுநர்கள் வகுத்த 11 தகுதிப் பாடுகளும் முற்றிலும் பொருந்தியுள்ள உலகத்தின் தனி மொழியென திகழ்கிறது தமிழ் மொழி.

கவிஞர்களுக்கு கற்பனைத் திறனும், புதிய சிந்தனையும், நினைவாற்றலும் மிக மிக அவசியம் என்பது என் எண்ணம். நினைவாற்றல் கொண்ட தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், அறிவியல் அறிஞர்கள், கவிஞர்கள், இலக்கிய படைப்பாளர்கள், எழுத்தாளர்கள் வாழ்வில் புகழ் உச்சிக்கு சென்று நிலையான பெருமைக்கு உரியவர்களாக வாழ்வின் வழி காட்டுபவர்களர்களாக திகழ்கின்றனர்.

என்னைப் போன்ற சிலருக்கு என்ன தான் சிந்தனைத் துளிகள் உதித்தாலும் நினைவாற்றல் குறைவால், நீர்க்குமிழியில் தோன்றும் வானவில் வண்ணங்கள் போல் நிமிடத்தில் சிதறி விடுகிறது. கவிதைக்கு மோனையும், எதுகையும் இரு கண்கள் போன்றதாகும். உயிர்நாடியே இவை தான் என்றும் சொல்லலாம். வயல் வெளிகளில் பாடும் பெண்கள் பாட்டில் கூட இவை இருக்கும் . ஒரு பாட்டில் எதுகை மோனை சரியாக அமையாவிட்டால் 'இந்த பாட்டில் எகனை மொகனை இல்லாம என்ன பாடுரே.' என சாதாரணமாக சொல்லி விடுவார்கள்.

"மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்தவ னாரடா" என்று ஒட்டக்கூத்தர் யானையின் பெருமைக்கு காரணமான மதத்தினைப் பாட்டின் பெருமைக்கு காரணமான் மோனைத் தொடைக்கு உவமை கூறுவார்.




சீர்திருத்த சமூகங்கள் வளரட்டும்!
சிந்தனை மலர்கள் மலரட்டும் —வாழ்வில்!
சிறப்பு விருதுகள் பெருகட்டும்!
என அன்புடன் வாழ்த்தும்

திருவூர் இரா. பழனிச்சாமி, தலைவர், பத்லாபூர் தமிழர் நலச் சங்கம்

# குடைக்காம்பும் பூக்காம்பும்

நூல் அனுபவம் கவிதைத் தொகுப்பு

தேவயானி - வெளியீடு வானவில் பதிப்பகம் மடத்துக்குளம்
பக்கம் 100 ; விலை ரூபாய் 100;
முதல் பதிப்பு 2024 ; தொடர்புக்கு 97 88 79 39 34




"ஓடும் தொடர் வண்டியில்
வாசிக்க புத்தகம் விரித்தேன் அனைத்துப் பயணிகளுக்கும்
நான் வேடிக்கை பொருளானேன்" என்ற அருமையானதொரு கவிதையை எழுதி இருக்கும் கவிஞர் தேவயானியின் இந்தத் தொகுப்பில் இடம்பெறும் அத்தனை கவிதைகளும் சமூகத்தின் மீது அவர் கொண்ட பற்றையும் சமூக அவலங்களைக் கண்டு மனதிற்குள் ஏற்படும் குமுறல்களையும் வெளிப்படுத்துகின்றன.

மகள் மீதான அப்பாவின் பாசம், மனிதர்களுக்கு பூக்கள் சொல்லும் பாடம், ஊருணிகளைக் காத்தல் அவசியம், மாற்றுத்திறனாளிகளை மதிப்பதன் அவசியம், வானத்திற்கும் உண்டு ஆசை, வாச்சாத்தி மக்களின் பரவசம், நீரில்லா ஆற்றின் நிலை, அன்பின் பயன், எட்டு வழிச்சாலையினால் மக்கள் படும் அவதியும் வலியும், பூமித்தாயின் பேச்சு, மகாத்மாவின் மறுபிறவி, பாலுணர்வின் மீதான விழிப்புணர்வு, பொம்மை தன்னை எடுத்து வைத்திருக்கும் குழந்தையை பற்றி பாடுவது, நரகாசுரன்கள் இன்னும் இருக்கிறார்கள், பெண்ணுக்கான மரியாதை, கோவில் யானையின் புலம்பல், நட்பின் மேன்மை, மீத்தேன் மீதான விவசாயிகளின் போராட்டம், சங்கப் பாடல்கள் பற்றிய பரிவும் நேசமும், பேச்சின் அவசியம், பாரதியைக் கண்டதும் ஏற்படும் மனநிலை, பாட்டி கதைகள் இன்றைக்குப் பொருந்துமா என்பதன் மீதான மறுபார்வை, மனிதர்களில் தீட்டுப் பார்ப்பவர்கள் பணத்தில் பார்க்கிறார்களா என்ற சமத்துவப் பார்வை என தன்னைச் சுற்றிய இயல்புகளைப் பாடுவதும் ஏற்றத்தாழ்வுகளால் பேதங்களுக்குள் வீழும் மனிதர்களைப் பாடுவதும் உயர்திணைகளுக்கு அஃறிணைகளும் வழிகாட்டும் என்று இயற்கையை துணைக்கழைப்பதும் சமகால சமூக அவலங்களை கண்ணுற்று அதன் மீதான கோபத்தை, ஆற்றாமையை எழுத்தின் வழியே இறக்கி வைப்பதுமாக சமத்துவ சகோதரத்துவப் பார்வையை இந்நூலில் விரித்து இருக்கிறார் கவிஞர்..

குடும்பத்தில் பெருஞ்சொத்தாக மகள்களைக் கருதும் பெற்றோருக்கு மகள் வளர்கையில் நிழல் தரும் குடையாக மாறும் அப்பா மகள் வளர்ந்த பின்னே அவளைத் தாங்கி உலகத்தில் புன்னகைக்க வைக்கும் மலராக உயர்த்தி அதை தாங்கிப் பிடிக்கும் பூக்காம்பாக தன்னை மாற்றிக் கொள்கிறார் அப்பா என்பதை அழகாக எழுதிச் செல்கிறது முதல் கவிதையின் பெரும் பாசம்.

திரு இளையவன் சிவா

# குடைக்காம்பும் பூக்காம்பும்

## நூல் அனுபவம்

## கவிதைத் தொகுப்பு

"தோற்றோடும் குணம் இல்லை
தோல்வியிலும் ரணம் இல்லை
போற்றாத வேர்களையும் தூற்றுகின்ற பண்பில்லை
நூறாண்டு வாழ்ந்தாலும் நித்தம்
அழுகின்றீர் கற்றிடுவீர் எமைப் பார்த்து
கற்றபடி வாழ்ந்திடுவீர்" என்று பூக்கள் மனிதர்களுக்கு கற்கச் சொல்லும் பாடத்தை நாம் கவனித்தாலே எதன் மீதான துன்பத்திலும் நாம் மாட்டிக் கொள்ளத் தேவையில்லை.

"மதுவை நீ மறந்துவிடு" என்ற தலைப்பிலான கவிதை இன்றைய காலத்தில் அவசியம். போதைக்குள் விழுந்து பொருளாதாரத்தைத் துறந்து குடும்பத்தை பரிதவிப்பில் கதறவிட்டு தன்னையே அழித்துக் கொள்ள மதுவுக்குள் புதைந்து போகும் மக்களுக்கு சவுக்கடி தருகிறது.

"உனக்குள் ஒரு சொர்க்கத்தை உற்பத்தி செய்கின்றாய்
தினமும் அதைத் தீண்டி தீஞ்சுவையை ரசிக்கின்றாய் வனவிலங்கு கூட்டமொன்று
வந்துனக்குள் புகுந்துவிடும் தினவெடுத்த காமுகனும்
திடமாகக் குடிபுகுவான் கனவுகள் அழிவதற்குள்
கண் விழித்து எழுந்து விடு மனையாளும் பிள்ளைகளும் மறப்பதற்குள் மீண்டு விடு"

என்று காட்டத்திலும் எரிமலை வெடிப்பாய் விழுகின்றன வார்த்தை நெருப்புகள்.

வறுமைக் குழிக்குள் புதைந்து விடாமல் குடும்பத்தை கரையேற்றவும் தன் கனவுகளைத் தொலைத்து விட்டு தியாகம் செய்யும் எத்தனையோ இளைஞர்கள் வெளிநாட்டில் வேலை செய்யச் செல்லும் அவலமும் அங்கே அவர்கள் படும் துயரமும் ""என் தேசமே""கவிதை கண்ணீருடன் மொழிபெயர்க்கிறது.

"தேசத்து வாசலிலே
திருவிழியை வைத்து
வானத்து வீதியிலே
திசையெல்லாம் தொலைத்து
நேசத்து உறவெல்லாம்
நெடுந்தூரக் கனவாகி
பாசத்தில் அன்னையவள்
பரிதவித்து கண்வழிய
காசுக்காய் கால் வைத்தேன்
கடல் எரியும் மணல் நாட்டில்""




திரு இளையவன் சிவா

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைத் தீயிடுவோம் என்ற மகாகவியின் குமுறல் தேசமெங்கும் ஒலித்தாலும் இன்னும் பாலியல் வன்புணர்வில் தினந்தோறும் பெண்களைத் துன்புறுத்தும் ஆண்களுக்கு எதைச் சொல்லி புரிய வைக்க? என்பதை "நீதியின் கைகள்" கவிதை வெளிச்சமிடுகிறது.

"பால்குடித்த தாய்முலையைப்
பற்றி இழக்க இயைந்திடுமோ
வரம் தந்த புனிதத்தில்
வன்புணர் மனம் வருமோ?" என்ற வரிகளை வாசித்தாவது ஆண்கள் திருந்தட்டும்.

உண்டு உயிர்ப்பித்து உறைவிடமாக்கி நம்மை உயரத்தில் இருத்தி வைக்கும் இயற்கையை நமக்கான பாலூட்டும் தாயாக வணங்க வேண்டுமே தவிர பேராசை என்னும் இச்சைக்குள் பிய்த்தெறிதல் கூடாது என்பதையே "பூமித்தாய் பேசுகிறேன்" கவிதை புலம்பித் தீர்க்கிறது.

"மரங்கள் என்னும் என்
மரகதப் பட்டாடையை
வெட்டிக் கிழிக்கிறீர்கள்
ஆறுகள் என்னும் என்
மார்புச் சேலையை
அடியோடு அழிக்கிறீர்கள்"

காலமாற்றம் மனிதர்களின் வாழ்வியலில் எத்தகு மாற்றங்களை ஏற்படுத்தி விடுகின்றன என்பதையும் சில தருணங்களில் அவை தலைகீழான மாற்றத்திற்கும் வித்திட்டு விடுகிறது என்பதையும் "சித்திரச் சுவர்கள்" கவிதை வெளிப்படுத்தி விடுகிறது. உறவு முறைகள் மாற்றம் இரவிலும் பணியாற்றும் வேலைச்சூழல் என பல்வேறு அக மற்றும் புறச்சூழல்களால் மனிதர்களிடம் குறைந்து வரும் கருத்தரிக்கும் சூழலைப் பேசுகிறது இக்கவிதை.

"ஒரு காலத்தில் கருவறுதலைக் கட்டுப்படுத்த
சிவப்பு முக்கோணம் ஏந்திய சுவர்களெல்லாம் இப்போது
கருத்தரித்தல் மையங்களின் முகவரிகளை சுமக்கின்றன"

உறவு முறைகளில் ஏற்பட்டு வரும் மன நெருக்கடிகளில் மாட்டிக் கொண்டு அல்லப்படுவது முதியோர்களாகத்தான் இருக்கின்றனர். பணம் தேடுவதிலும் தனித்திருத்தலும் மட்டுமே சுகம் என எண்ணிக்கொண்ட இளையோர் முதியோர்களின் அனுபவத்தையோ அவர்களின் கருத்துக்களையோ செவிமடுக்காமல் அவர்களைத் துரத்தி விடுகிறார்கள். தமது பிள்ளைகளுக்கும் உறவுகளைச் சொல்லி வளர்க்காமல் தனித்தே வளர்ப்பதால் அவர்களுக்குள் இயல்பாக இடம் பெற வேண்டிய அறங்கள் சிறந்த பண்புகள் காணாமல் போய்விடுகின்றன. இத்தகு சூழலை ""பணத்தை தேடும் புண்ணியம்"" கவிதை

திரு இளையவன் சிவா

காட்சிப்படுத்துகிறது.

"அம்மாவிடம் வாங்கிய
சில்லறைக் காசுகளை
கோவில் படிகளில் ஒவ்வொரு பிச்சைக்காரர் கையில்
போட்டுக் கொண்டு வந்தது குழந்தை ஏதோ ஒரு படியில்
தன் அப்பத்தா அமர்ந்திருப்பதை அறியாமலே"

சமூகத்தையும் அதன் நுகர்வையும் தனது கூரிய பார்வையாலும் தேர்ந்த வாசிப்புத் திறத்தாலும் சங்க காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் பாலமிடும் கவிதைகளைப் படைத்திட்ட குடைக்காம்பும் பூக்காம்பும் வாசிப்போருக்கு அறங்களை வளர்த்திடும் குடையாகவும் அவலங்களைத் துரத்திட ஏந்திடும் வாள்கரமாகவும் மாறிவிடுகிறது. சமூகத்தை நமக்காக ஒழுங்கான பாதையில் வழிநடத்திட இதுபோன்ற வரிகள் எல்லோருக்குள்ளும் நுழைந்திடும்போது மாற்றங்கள் நல்லவையாக மாறத் தொடங்கி விடும்.




திரு இளையவன் சிவா

# இராம.பெரியகருப்பன்

கட்டுரை

தமிழண்ணல் என்கிற இராம. பெரியகருப்பன் ( 12 ஆகஸ்ட் 1928 - 29 டிசம்பர் 2015) ஒரு தமிழ்நாட்டுத் தமிழறிஞர் ஆவார். இருபதாம் நூற்றாண்டின் தமிழ் ஆளுமைகளுள் குறிப்பிடத்தகுந்தவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கியவர். தமிழ்நாட்டு அரசாங்கம் உருவாக்கிய தமிழிலக்கிய சங்கப்பலகை குறள்பீடம் என்ற அமைப்பின் துணைத்தலைவராகப் பதவிவகித்தார்.



## பிறப்பு

இன்றைய சிவகங்கை மாவட்டம் நெற்குப்பை என்ற சிற்றூரில் கல்யாணி - இராமசாமி இணையருக்கு 12 ஆகஸ்ட் 1928ல் மகனாகப் பிறந்தார். தமிழண்ணல். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் பெரியகருப்பன்.

## கல்வி

பள்ளத்தூர், ஏ.ஆர்.சி. உயர்நிலைப்பள்ளியிலும், மேலைச்சிவபுரி, கணேசர் செந்தமிழ்க் கல்லூரியிலும் கல்வி கற்றார். 1948 இல் திருவையாறு அரசர் கல்லூரியிலும் பயின்று தமிழ் வித்துவான் பட்டம் பெற்றார். வசதி இல்லாததால் கல்லூரியில் சேராமல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை (பொருளியல்) (1948), முதுகலைத் தமிழ்(1961) ஆகிய பட்டங்களை தனிப்படிப்பின் வழியாகத் தேர்ச்சிப்பெற்றார்.மதுரை தியாகராசர் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிய காலத்தில் சங்க இலக்கிய மரபுகள் என்னும் பொருளில் ஆய்வு செய்து 1969-இல் முனைவர் பட்டம் பெற்றார். முனைவர் சி.இலக்குவனாரும், முனைவர் அ.சிதம்பரநாதனாரும் இவர்தம் ஆய்வு நெறியாளர்கள் ஆவர்]

திரு அ.வில்சன், இதழாசிரியர்

# இராம.பெரியகருப்பன்

கட்டுரை

### குடும்பம்

தமிழண்ணல் அவர்களுக்கு 1954, ஆகத்து 30 இல் திருமணம் நடைபெற்றது. மனைவியின் பெயர் சிந்தாமணி. இவர்களுக்குச் சோலையப்பன், கண்ணன், மணிவண்ணன் என்ற ஆண்மக்களும், கண்ணம்மை, அன்புச்செல்வி, முத்துமீனாள் என்ற பெண்மக்களும் பிறந்து வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றனர்.

### பணிகள்

13 ஆண்டுகள் காரைக்குடியில் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். பின்னர் மதுரை தியாகராசர் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இவரது முயற்சியையும், கடின உழைப்பையும், சங்க இலக்கியத்தில் இருந்த ஈடுபாட்டையும் பாராட்டி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த மு. வரதராசனார், பல்கலைக்கழகத்தில் பணியளித்ததோடு இரண்டே ஆண்டுகளில் இணைப்பேராசிரியராகப் பதவி உயர்வும் அளித்தார். 1981-82 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தேசியப் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

இரண்டாண்டுகள் பல்கலைக்கழக மானியக் குழுவின் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றினார். தமிழ்க்குடிமகன், கா. காளிமுத்து உள்பட ஐம்பதுக்கும் மேற்பட்டோருக்கு ஆய்வு வழிகாட்டியாகவும் சாகித்ய அகாதெமியில் 10 ஆண்டுகள் உறுப்பினராகவும் இருந்தார்.

### சிறப்பு

1971 இல் குடியரசு நாளில் புதுதில்லி அனைத்து இந்திய வானொலி நிலையத்தில் நடைபெற்ற கவியரங்கில் தமிழகத்தின் சார்பில் கலந்துகொண்டு இவர் செல்வம் என்ற தலைப்பில் பாடிய கவிதை அனைத்து இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு ஒலிபரப்பப்

திரு அ.வில்சன், இதழாசிரியர்

பெற்ற சிறப்பிற்கு உரியது. மதுரை மீனாட்சியம்மை பற்றி இவர் பாடிய பாடல்கள் தமிழக அரசின் முதற்பரிசு பெற்றது. மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ் என்ற இவர் நூலும் பரிசுபெற்ற ஒன்றாகும். தமிழக அரசால் சாகித்திய அகாதெமியின் பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்ததெடுக்கப்பட்டார். 1985 முதல் ஞானபீட விருதுக்குரிய கருத்துரைஞர் குழுவில் பணியாற்றி வருகிறார். தமிழ்நாட்டு அரசாங்கம் 2000ஆம் ஆண்டில் அமைத்த தமிழிலக்கிய சங்கப்பலகையின் குறள்பீடம் என்ற அமைப்பின் துணைத்தலைவராகப் பொறுப்புவகித்தார். 2001ஆம் ஆண்டு மே மாதம் அப்பதவியைத் துறந்தார்.

பல்கலைக்கழக நல்கைக்குழு தமிழண்ணல் அவர்களை 1981-82 ஆம் கல்வியாண்டில் தேசியப் பேராசிரியராகத் தேர்வு செய்து சிறப்புச்செய்தது. இந்தியப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிற்கும் சென்று தமிழ் மொழியின் தொன்மை, சிறப்பு, இலக்கியக் கொள்கைகளைப் பற்றி சொற்பொழிவாற்றிப் பிற மொழியினருக்குத் தமிழின் சிறப்பை எடுத்துரைத்தவர்.

இலங்கை, சப்பான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்குக் கல்விப் பயணமாகச் சென்று கருத்தரங்குகளில் உரையாற்றிய பெருமைக்கு உரியவர்.

இவர் மேற்பார்வையில் நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். மேனாள் தமிழக சட்டமன்ற சபாநாயகர்கள் முனைவர் தமிழ்க்குடிமகன், முனைவர் கா. காளிமுத்து உள்ளிட்டவர்கள் இவரின் நெறிப்படுத்தலில் முனைவர் பட்டம்பெற்றவர்கள். தினமணி உள்ளிட்ட இதழ்களில் இவர் எழுதிய கட்டுரைகள் புகழ்பெற்றவைகளாகும்.

தமிழக அரசால் சாகித்திய அகாதெமியின் பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்ததெடுக்கப்பட்டார். 1985 முதல் ஞானபீட விருதுக்குரிய கருத்துரைஞர் குழுவில் பணியாற்றியவர். தமிழக அரசின் சங்க இலக்கியக்குறள் பீடத்தின் துணைத் தலைவராகவும் பணிபுரிந்தவர்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இவருக்கு 1989 ஆம் ஆண்டில் தமிழக அரசின் திரு.வி.க.விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், வெங்கடேசுவரா பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், கோழிக்கோடு பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டக்குழு உறுப்பினராகப் பணிபுரிந்த பெருமைக்கு உரியவர். சிங்கப்பூர் அரசின் அழைப்பில் தமிழ்க்கல்விக்கு உரிய பாடநூல் எழுதும் பணியிலும் ஈடுபட்டவர்.

தமிழகப்புலவர் குழுவின் உறுப்பினராக இருந்து திறம்படப் பணிபுரிந்து வருகிறார். தமிழ்ச்சான்றோர் பேரவை தமிழ்வழிக் கல்வியை முன்னிலைப்படுத்தித் தமிழறிஞர்கள் சாகும்வரை உண்ணாநோன்பு போராட்டம் நிகழ்த்திய பொழுது அறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் போராட்டத் தலைமையிலிருந்து விலகிக்கொண்டபொழுது தாமே முன்வந்து தமிழ்வழிக் கல்விக்காகச் சாகும்வரை உண்ணா நோன்பில் தலைமைதாங்கி நடத்திய வரலாற்றுப் பெருமைக்கு உரியவர் நம் தமிழண்ணல் அவர்கள்.

அருட்செல்வர் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் தொல்காப்பியப் பதிப்பை அறிஞர் இராமலிங்கனார், பகீரதன் ஏற்பாட்டில் பதிப்பித்துப் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில் அறிஞர்கள் முன்னிலையில் வெளியிட்டபொழுது தமிழுக்கு இந்நூல் கேடானது எனத் துணிந்து குரல்கொடுத்து கண்டித்தவர் தமிழண்ணல் அவர்கள்.

**விருதுகள்**

நல்லாசிரியர் விருது
1989-இல் திரு. வி. க. விருது
1995-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் செம்மல் விருது

## விருதுகள்

- நல்லாசிரியர் விருது
- 1989-இல் திரு. வி. க. விருது
- 1995-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் செம்மல் விருது
- மத்திய அரசின் செம்மொழி விருது
- தமிழக அரசின் கலைமாமணி விருது
- எஸ்ஆர்எம் பல்கலைக்கழக தமிழ்ப் பேராயத்தின் வாழ்நாள் சாதனையாளர் விருது,
- கவிதை நூலுக்காக மதுரை மீனாட்சி விருது

## தமிழண்ணல் நூல்கள்



- அகநானூற்றுக் காட்சிகள்
- இனிக்கும் இலக்கியம்
- வாழ்வரசி புதினம்
- நச்சுவளையம் புதினம்
- தாலாட்டு
- காதல் வாழ்வு
- பிறைதொழும் பெண்கள்
- சங்க இலக்கிய ஒப்பீடு- இலக்கியக் கொள்கைகள் (2003)
- சங்க இலக்கிய ஒப்பீடு- இலக்கிய வகைகள் (2005)
- தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் (2004)
- புதியநோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு
- தமிழியல் ஆய்வு (இ.முத்தையாவுடன்)
- ஆய்வியல் அறிமுகம் (இலக்குமணனுடன்)
- ஒப்பிலக்கிய அறிமுகம்
- குறிஞ்சிப்பாட்டு இலக்கியத் திறனாய்வு விளக்கம்
- தொல்காப்பியம் உரை
- நன்னூல் உரை
- அகப்பொருள் விளக்கம் உரை



### தமிழண்ணல் நூல்கள்

- புறப்பொருள் வெண்பாமாலை உரை
- யாப்பருங்கலக் காரிகை உரை
- தண்டியலங்காரம் உரை
- சொல் புதிது சுவை புதிது
- தமிழில் அடிக்கடி நேரும் பிழைகளும் திருத்தமும்
- தமிழுக்கு ஆகமங்கள் தடையாகுமா?
- பேசுவது போல் எழுதலாமா? பேச்சுத் தமிழை இகழலாமா?
- பிழை திருத்தும் மனப்பழக்கம்
- உரை விளக்கு
- தமிழ் உயிருள்ள மொழி
- தமிழ் கற்பிக்கும் நெறிமுறைகள்
- தமிழ்த்தவம்
- திருக்குறள் நுண்பொருளுரை
- இனிய தமிழ்மொழியின் இயல்புகள் முதலியன
- இனிய தமிழ்மொழியின் இருவகை வழக்குகள்
- உங்கள் தமிழைத் தெரிந்துகொள்ளுங்கள்
- உலகத் தமிழிலக்கிய வரலாறு
- ஊடகங்களால் ஊரைப் பற்றும் நெருப்பு
- எழுச்சி தரும் எண்ணச்சிறகுகள்

### மறைவு

தமிழண்ணல் மதுரை சதாசிவ நகரில் உள்ள அவரது இல்லத்தில் 2015 டிசம்பர் 29 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

**நன்றி**
விக்கிபீடியா
Tamilonline

## நாளை நமதே

# விடியல் என்பது
# கிழக்கில் அல்ல
# நம் உழைப்பில்

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :
9597887847
8870884969




அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com